1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams:
"CATHOLIC PRESS"
JAFFNA.

Telephone:
NO. 100

# சத்தியவேத பாதுகாவலன்

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம் "

76-ம் புத்தகம் 47-ம் இல. யாழ்ப்பாணம் 1951-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 29-ந்திகதி வியாழக்கிழமை—பிரதிசதம் 10

## ஆசா. யோசேவாஸ் குரு முனிவரின் மூன்றும் நூற்றுண்டு ஞாபக விழா

ஆசா. யோசேவாஸ் குருமுனிவர் பரமபதம்அடைந்து 240வருடங்கள் சென்றிருப்பினும் இலங்கையில் அவருடைய ஞாபகம் இன்றைக்குமே அழியாது நிலை பெற்றிருக்கின்றது. அவரது ஜனன மூன்றும் நூற்றுண்டு விழாவிலே அப்புனிதஞாபகம் புத்துயிர்பெற்றுப் புதுமையடைகின்றது. யாழ்ப்பாணத்திலும், விசேஷமாகச் சில்லாலையிலும் வன்னி-மாதோட்டப் பகுதிகளிலும் அவரைப்பற்றித்தம் முன்னேரால் அறிவிக்கப்பெற்றுப் பரம்பரையில்வந்த அநேகசம்பவங்களை இப்போதுள்ளாரும் அறிந்தவர்களாய்ப் பிறருக்கும் அவைகளை எடுத்துச்சொல்லி வருகின்றுர்கள்.

கோவைநகரிலே அர்ச். சவேரியாரால் மனந்திருப்பப்பெற்ற பிராமணர் குலத்தில் பிறந்த யோசேவாஸ்முனிவர் இலங்கையிலே உலாந்தஅரசினரால் கத்தோலிக்கமக்கள் அனுபவிக்கும் இடுக்கண்களைப்பற்றி அறிய வந்ததும் இங்குவர ஆயத்தப்பட்டார். கத்தோலிக்க குருமார் எவருமே இலங்கையில் கால் வைக்கப்படாதென்று உலாந்த அரசினர் தடைவிதித்திருந்தமையால், உலாந்தக்காரரின் வேலைகாரனைப்போல் வேஷம் பூண்டு தமது பூசைஆயத்தங்களுடன் கப்பலேறித் தலைமன்னுரை அடைந்தார். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு வீட்டுக்கு வீடுசென்று பிச்சையெடுத்துச் சாப்பிட்டுக்கொண்டு யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தார்.

யாழ்ப்பாணம் வந்தபின் பட்டினமுழுவதும் வீட்டுக்குவீடு இரந்து திரிகிறவேளை அந்தந்த வீட்டாரில்கத்தோலிக்கர்இன்னுரெனக் குறிப்பாகக் கண்டறிந்தார். தம்மை ஓர் குருவென்று அவர்களுக்கு வெளிப்படுத்தி அந்தரங்கமாக அவர்களையெல்லாம் ஓர்வீட்டில்சேர்த்துத் திவ்வியபூசைசெய்து, அவர்களுக்குத் தேவதிரவியானுமானங்களை நிறைவேற்றியும், வேதசத்தியங்களைப் படிப்பித்தும்வந்தார். ஆனல், பட்டினப்பகுதியிலே அந்தரங்கமாகச் சில காலம் அவர் குருத்தொண்டாற்றிவருவதை அறிந்துவிட்டனர் உலாந்த அரசினர். அவரைப் பிடிக்க முயன்றனர். அதற்குப் பயந்து பட்டினத்திலிருந்த கத்தோலிக்கர் அவரைச் சில்லாலைக்கு அனுப்பிவைத்தனர்.

அக்காலத்திலேசில்லாலை வேத வைராக்கியத்தில் மிகச்சிறந்து சின்னரோமை என்று அறியப் பட்டுவந்தது. அவ்வூர்க்கத்தோலிக்கர் தேவபக்தி, குருபக்தியில் கதித்தவர். அஞ்சா நெஞ்சம்படைத்தவர். அதனல் முனிவர் அங்குஇருக்கிறுர் என்பதை அறிந்தபோதிலும் அங்கு போகக் காலெடுத்து வைக்கவும், அவரைக் கைதுசெய்யவும் அரசினர் மனந்துணியமாட்டாரென்றே அவர்சில்லாலைக்கு அனுப்பி வைக்கப்பெற்றனர்.

அரசினர் அவரைப் பிடித்து வரும்படி தமது போர்வீரரை அனுப்பினும் சில்லாலைக் கத்தோலிக்கர் அப்போர்வீரருக்குப் பின்வாங்கக் கூடியவர்கள் அல்லர். அதனல் அவர் அங்கிருப்பதை அரசினர் நன்கறிந்தும் கலகத்துக்கஞ்சி அறியாதவர்போல் வாளாவிருந்து விட்டனர். அர்ச். அந்தோனியாரைப்போலவே யோசேவாஸ் முனிவரும் திவ்வியபாலனின் காட்சிபெற்று அவரைத் தமது கரத்தேந்தினுரென்றும், மற்றுஞ்சில அபூர்வசம்பவங்களையும் பரம்பரையாகஅறிந்து அவ்வூர் வாசர் இன்றைக்கும் சொல்லி வருகின்றனர்.

வன்னி-மாதோட்டப்பகுதிகளில் சம்மனசுச் சுவாமியாரென அறியவும், கொண்டாடவும் படுகிறவர் யார்? யோசேவாஸ் முனிவரே. விளாங்குளப் பகுதியிலே மகாபூச்சியமாகக் கொள்ளப்படுகிறசிலுவைஒன்று இருக்கிறது; அதனை ஸ்தாபித்தவர் சம்மனசுச் சுவாமியாரே எனத் திரு.லூயிஸ்துரை விளாங்குள உபஏசன்றராய் இருந்த போது அரசாங்கத்துக்கு எழுதியஅறிக்கைஒன்றில் தெரிவித்திருக்கின்றுர்.

வன்னியிலே மூக்கன்முதலைகள் இராக்காலங்களில் குளத்திலிருந்து வெளிகொண்டு ஊர்மனைக்குள்வந்து எதிர்ப்பட்டவர்களைக் கடித்துக்கொன்றுவிடுகின்றன என்று ஊரவர்கள் முனிவரிடம்போய் முறையிட்டபோது, அவர் குளத்தண்டை சென்று இன்று முதற்கொண்டு இக்குளத்தைவிட்டு வெளிகொள்ளப்படாதென்று முதலைகளுக்குக் கட்டளையிடவே, அன்றுதொட்டு அவைகள் வெளியே வரவில்லையென்று பரம்பரையாகச் சொல்லப்படுகிறது.

இன்னும் குடிமனைகளுக்கு அருகாமையிலுள்ள காட்டில் வசிக்கும் கருவிலி நாகபாம்புகள் இராக்காலத்தில் வெளிகொண்டு வந்து நித்திரை செய்வாரைக் கடித்துப் பெரும்அபாயம்உண்டு பண்ணுகின்றனவென்று சனங்கள் அவரிடஞ்சென்று முறையிட்டுக்கொள்ளவே, முனிவர் அந்தக்காட்டைவிட்டுஅப்பாலே போகும்படி அப்பாம்புகளுக்குக் கட்டளையிட்டார்; அன்றுமுதல் அவ்வகைப்பாம்புகளை அவர் குறித்தஎல்லைக்கு அப்பாலன்றி இப்பாலுள்ள காடுகளில் ஒருபோதுமே கண்டதில்லையென்று பாரம்பரியமாகச் சொல்லப்படுகிறது.

முனிவர் யாழ்ப்பாணத்திலும், வன்னி — மாதோட்டப்பகுதியிலும், அதன்பின் புத்தளத்திலும் மூன்றுவருடகாலம் திருவூழியம் செய்தபின் விமலதரும சூரியன் எனும் அரசனின்நாடாகிய கண்டிக்குச் சென்றுர். கல்வீனிய மதத்தினரின் குற்றச்சாட்டின் பேரிலேஅவர் இரண்டரைவருடகாலம் அவனல்கடுஞ்சிறைவைக்கப்பட்டார். ஆயினும்பிந்த அவர் ஓர் மகாத்மா என்பதை அரசன்கண்டறிந்து அவருடன் மிகுந்த அன்பாய்நடந்து அவர் பட்டணத்தில் நடமாடித்திருவூழியஞ்செய்யும்படி விட்டுவிட்டான். அப்போது முனிவர் அங்கு செய்த முதற்பெருஞ்செயல் தேவமாதாவின் கோவில் ஒன்றைக்கட்டியதேயாகும்.

கண்டிப்பகுதியிலே அந்நாட்களில் நெடுநாள் மழைபெய்யாது குளங்குட்டைகளெல்லாம் வற்றிவரண்டு மக்கள் தண்ணீரில்லாமல் தவித்துக்கஷ்டப்பட்டார்கள். அப்பொழுது மழைபெய்து நாடு செழிக்கத் தமது கடவுளை வேண்டிக்கொள்ளும்படி அரசன்முனிவரை இரந்துநின்றுன். அவரும் அதற்கிணங்கிப் பட்டணத்தின் பிரசித்தமைதானம் ஒன்றில் பீடம்ஒன்றை அமைத்தார். அதன்மேல் ஓர்சிலுவையை ஸ்தாபித்தார். தமது இதயத்தைக்கடவுளுக்குநேரேஉயர்த்தி மன்றுடத்தொடங்கினுர். அவ்விதம் மன்றுடத்தொடங்கிய சிறிதுநேரத்துள் வானங்கறுத்து, மழைநன்றுகப்பெய்து எங்கும் தண்ணீர் பாய்ந்தோடியது. ஆனல், முனிவர் முழந்தாளிட்டிருந்த இடத்தில் ஓர் துளிகூட விழவில்லை. அப்போது அரசன் ஆச்சரியவசத்தனுய்த் தனது ஆட்சியுள்அடங்கிய பகுதிமுழுவதிலும்போய் அவர் திருத்தொண்டாற்ற அனுமதியளித்தான்.

முனிவர் கண்டிநகரில் ஆறு வருடம் தங்கியிருக்கும்போது கண்டிஇராச்சியத்திலே பயங்கரவிதமாக அம்மைநோய் தலைகாட்டியது. கண்டிநகரிலேயே அது மிகஉழம்முரமாக இருந்தது. நகர்வாசிகள்பயந்து நகரை விட்டு ஓட்டமெடுத்தனர். நோய் கண்டவர்களை இனமென்றும், சனமென்றும்கருதாது, சிறிதும் தயைதாட்சணியமில்லாது கைவிட்டு வெளியேறினுர்கள். அப்போது முனிவரே அம்மைநோய் கண்டவர்களின் இனமாகவும், சனமாகவுமிருந்து ஓர் இளம் சுவாமியாரின் துணையோடு அவர்களைப்பராமரித்துவந்தார். தமது கையால் தாமேசமைத்த சோற்றுப்பானைகளைத் தூக்கிக்கொண்டு தினமுங் காலை மாலை தெருத்தெருவாயும், வீடுவீடாயும் திரிந்து சாப்பாடுகொடுப்பதும், மருந்துகொடுப்பதும் புண்களை ஆற்றுவதுமாகிய நற்செயல்களைப் புரிந்துவந்தார். இதுவே அவரின் தைரியத்தையும், தற்பரித்தியாகத்தையும், தருமசிந்தையையும ஒருவாறு புலப்படுத்துவதற்குத் தக்க ஓர் சந்தர்ப்பமாயிற்று. இத்தகைய

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க செய்திகள்

*United States Information Service, COLOMBO.*

## விஷின்ஸ்கியின் வெற்றுரை

— பரிஸ்

ஐ. நா. பொதுமன்ற மகாநாட்டிலே மூவல்லரசுகளின் ஆயுதக் குறைப்பு யோசனையைச் சோவியற் வெளிநாட்டு மந்திரி அன்ட்ரு விஷின்ஸ்கி தாக்கிப் பேசினுர். சுதந்திரநாடுகளுக்கு எதிராக வழக்கமாகவழங்கும் 'வசைப்புராண'த்தையே அவர் திரும்பப்படித்தார். சோவியற்அரசு "சமாதான"த்திற்காகவே பாடுபடுகிறதுஎன்ற பல்லவியையும் அவர்விடவில்லை. அவருடைய சமாதானவெற்றுரையைக் குறிப்பிட்டு அமெரிக்க வெளிநாட்டுமந்திரி அச்சிஸன் அவர்கள் கூறியதாவது:

"சமாதானத்தைப்பற்றி ருஷியா கணக்குவழக்கின்றிப் பேசியிருக்கிறது. ஆனல், செயலளவில் சமாதானத்தைச் சாதிக்கவேண்டி வரும்போது அல்லது சமாதானத்தைக்காக்க ஐக்கியப்படவேண்டி வரும்போது ருஷியதலைவர்கள் குறுக்கேநிற்கிருர்கள். புதிதாக ஐந்துவல்லரசுகளின் உடன்பாடுஒன்று காணவேண்டும் என்று ருஷியா சொல்லுகிறது. ஆனல், 60 வல்லரசுகள் உடன்பாடான — ஐ. நா. தர்மசாசனத்தை ஏற்றுநடக்க மறுக்கிறது.

"சுதந்திர உலகம் சமாதானத்தைப் பற்றி வாய்ப்பந்தல் போடவில்லை. சாதனைகள் புரிந்துள்ளது. 48 தேசங்கள் ஐப்பானுடன் சமாதான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன. சோவியற் அரசும், அதன் சார்புநாடுகளும் அதற்குக் குறுக்கே நின்றன. கூட்டுப்பாதுகாப்புக்குச் சுதந்திரநாடுகள் ஒன்றுதிரள வேண்டும் என்பதும் தீர்மானமாகியுள்ளது. நாம் நமதுபலத்தைப் பெருக்கிவர ஒரேகாரணமே உண்டு. சமாதானம்விரும்பும் நாடுகள் பலவீனமாய் இருக்கிறவரைக்கும் சமாதானம் நிலைக்கமுடியாது. அந்தக்குறைபாட்டைப் போக்குவதுதவிர வேறுவழி நமக்கில்லை.

"கோறியாவில் நடக்கின்ற கம்யூனிஸ்த ஆக்கிரமிப்பு, சுதந்திரஉலகம் எதிர்நோக்கியுள்ள பிரச்சினையை நன்ருக விளக்குகிறது. ஆக்கிரமிப்புக்கு மாற்று, போதிய பலம் படைத்திருப்பதே.

"சோவியற்அரசுக்குச் சமாதானத்தில் மனத்தூய்மையான எண்ணம் இருக்குமானுல் அதைக் காட்ட அதற்கு எவ்வளவோ சந்தர்ப்பங்கள் உள்ளன. கோறியாப்போரை நிறுத்த அது ஒரு சொல்லுச்சொன்னுல் போதும். அப்படிச் சொல்லியிருக்கிறதா? என்பதே கேள்வி. அது சமாதானபூர்த்திக்குத் தடைபோடுவதோடு, தனிமனிதன் உரிமைகளை நசுக்கியும் வருகிறது."

## ருஷியாவின் யோசனைகள்

— புதுடில்லி

"போர்க்கருவிகளைச் சிராகக்குறைக்கவேண்டும்என்ற அமெரிக்க-பிரித்தானிய-பிரான்சிய முக்கூட்டுயோசனைக்குப் பரிசில்நடக்கும் ஐ.நா. பொதுமன்றத்திலே சோவியற் வெளிநாட்டு மந்திரி விஷின்ஸ்கி தருகின்ற "பதில்" உலகசமாதான லட்சியத்திற்கு உபகாரமல்லஎன்று நிச்சயமாகச் சொல்லமுடியும்" என்று "இந்துஸ்தான் டைம்ஸ்" பத்திரிகை தனதுதலையங்கத்தில் எழுதியுள்ளது. அதுசொல்வதாவது:

"முக்கூட்டு ஆயுதக்குறைப்புத் திட்டத்தை மட்டுமல்லாமல, ருஷியா தானேசெய்தவல்லரசுகளின் ஆயுதப்பரிகரண மாநாட்டுத்திட்டத்தையும் நாசமாக்கவேண்டுமென்ற தீர்க்கமான எண்ணத்தோடு விஷின்ஸ்கி பரிஸ்நகருக்கு வந்திருப்பாராகில், அந்தக் காரியத்துக்கு இதைக்காட்டிலும் பிரமாதமான வெற்றி கிடைத்திருக்கமுடியாது. சொன்னதைச்சொல்லுமாம் கிளிப்பிள்ளை என்பதுபோல், திருப்பித் திருப்பி ஒவ்வொரு சர்வதேசசந்திப்பிலும் சோவியற்ருஷிய பிரதிநிதிகள் இப்படிப் பல்லவிபாடுவது எவரின் நன்மைக்காகஎன்று புரிந்துகொள்வது கஷ்டமாகவிருக்கிறது.

"கோறியயுத்தத்தைப்பற்றிக் குறிப்பிட்டு, உடனேபோரை நிறுத்தவேண்டும்என்றும்; பத்துத்தினங்களுள் 38-ம் சமாந்திரக்கோட்டுக்குப் படைகள் பின்வாங்க வேண்டும்என்றும், கோறியாவிலிருந்து எல்லாவெளிநாட்டுப் படைகளும் மூன்றுமாதங்களுள் வெளியேறவேண்டும்என்றும் விஷின்ஸ்கி யோசனைகூறுகிருர். கோறியயுத்தம் எப்படி ஆரம்பமாயிற்று? கிசாங், பான்முன் ஜாம் பேச்சுக்கள் எப்படிநடந்து வந்துள்ளன? என்பவை ஒருவருடைய ஞாபகத்துக்கு வரும்போது, கோறியாவிலிருந்து மூன்று மாதங்களுள் எல்லா வெளிநாட்டுப் படைகளையும் வெளியேற்றக்கூடும்என்று கருதுகிறவர் அபார நம்பிக்கையுள்ளவராக இருக்கவேண்டும்.

"அணுச்சக்திஆயுதங்களை அழித்துவிட வேண்டும் என்று ருஷியா விடும் அழைப்பும் அந்தரங்கசுத்தமானதல்ல. அயல்அதிகாரிகள் ஆயுததளவாடங்களைப்பரீட்சித்துப்பார்க்கக்கூடாதுஎன்று ருஷியாஉறுமும்போது விஷின்ஸ்கியின்யோசனை எப்படி ஒப்பேறமுடியும்? இவரின்கூற்றுகளில் எல்லாவற்றையும் விட அதிகவியப்பு ஊட்டுவது என்னவென்றுபார்த்தால், அது அமெரிக்கா, ருஷியா, பிரித்தானி, பிரான்ஸ், சீனுஆகிய ஐந்துவல்லரசுகளிடையே சமாதானஒப்பந்தம் ஏற்படவேண்டும் என்று அவர்சொல்வதுதான். இந்த ஐந்துதேசங்களும் சேர்ந்து, இப்படிப்பட்டதொரு சமாதான உடன்பாட்டுக்கு மற்றநாடுகளை இணங்கவைக்க வேண்டும்என்றும் விஷின்ஸ்கிகூறுகிருர். அதாவது ஆயுதக்குறைப்பு, சமாதானம்ஆகிய முக்கியபிரச்சனைகளில் மற்றநாடுகள் வாயைத்திறந்து ஒரு அபிப்பிராயமும் சொல்லவிடாமல் உலகம்முழுவதன் மீதும் வல்லரசுகளின் ஆதிக்கத்தை நிலைக்கவைப்பது என்ருகும்."

## தியாகம் செய்யத் தயார்

— பரிஸ்

"உலகசமாதானத்துக்கு அத்தியாவசியமானபலத்தை அரண்செய்வது மட்டுமல்லாமல், வறுமையையும், பொருளாதார வளத் தாழ்வையும் எதிர்த்துநடக்கும் போராட்டத்தில் பிறருக்கு உபகாரம்செய்யவும் அமெரிக்கமக்கள் தியாகம்புரியத் தயாராயிருக்கின்றனர்" என்று இங்கு மாதர்கழகக் கூட்டமொன்றில் உரைநிகழ்த்தும்போது, ஸ்ரீமதிறூஸ்வெல்ற் குறிப்பிட்டார். இவர் தற்போது பரிஸ்நகரில் நிகழும் ஐ.நா. பொதுமன்ற கூட்டங்களுக்கு அமெரிக்கபிரதிநிதிகளில் ஒருவராகவந்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது:

"பொருளாதாரம், சமூகவியல்ஆகிய இந்தத்துறைகளில் ஈடுபடுகிற ஐ. நா. கிளையுறுப்புகளில் அமெரிக்கா அனுஷ்டானபூர்வமாகத் தனது தியாகஉணர்ச்சியை மெய்ப்பித்துள்ளது. சந்தர்ப்பம் மட்டும் கிடைத்தால் மக்கள்யாவரும் அமைதியோடு சேர்ந்துவாழ முடியும் என்பதில் எங்களுக்குள்ள நம்பிக்கைக்கு எங்கள் சகாயத்திட்டங்களே சான்றுபகர்கின்றன. நாங்கள் காரியவாதிகள். சமாதானத்தில் எங்களுக்கு ஆர்வமிருக்கிறது. அதை நாங்கள் செயலளவில் காட்டிவருகின்ருேம். எனவேதான், சோவியற்அரசு தனக்கும் சமாதானத்தில் ஆர்வமிருப்பதாகச் சொல்லும்போதெல்லாம், "நல்லது. அதைச்செயலளவில் காட்டு" என்று நாங்கள் அடிக்கடி ருஷிய தலைவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டியிருக்கிறது. அப்படி அவர்கள் தங்களுக்குள்ள 'சமாதான' ஆர்வத்தைச் செயற்படுத்தாவிடில் அந்தஆர்வத்தை நாங்கள் மெய்யென நம்புவதற்கில்லை.

"சமாதானத்தைக்காக்கவே நாங்கள் பலத்தைப் பெருக்குகிருேம். போருக்குப்போக நாங்கள் விரும்பவில்லை. அமெரிக்காவிரும்பும் ஒரேயொருயுத்தம், வறுமையைத்தொலைத்தொழிக்கும் யுத்தமேஎன்று அமெரிக்கஜனுதிபதி சொன்னபோது, அவர் உண்மையைத்தான், அதாவது அமெரிக்கமக்களின் உள்ளக்கிடக்கையைத்தான் சொன்னர்."

## நானுசங்கதிகள்

—மேற்குவங்காள கவர்னராக டக்றர் முக்கர்ஜிஎனும் கிறீஸ்தவர் நியமனஞ்செய்யப்பெற்றுள்ளார். தற்போது பம்பாய்க்கவர்னராக இருந்து வருகின்ற ராஜா மகாரற்சிங்அவர்களும் ஓர்கிறீஸ்தவரே. இருவரும் புறெட்டஸ்டாந்த கிறீஸ்தவர்கள். இந்திய அரசியல்திட்டம் நிர்மாணமாகும் போதும், சிறுபான்மைக் கம்மிற்றியிலும் டக்றர்முக்கார்ஜி சிறந்தசேவை ஆற்றியுள்ளார்.

—கோறியாவில்நின்று போராடும் யுத்தவீரர்களுக்கென்று கலம்பஸின் தினமன்று தங்கள் சரீரத்திலிருந்து இரத்தஉபகாரஞ்செய்த 600 கன்னியாஸ்திரிமாருக்கும் நன்றிதெரிவித்துக் கோறியாவிலுள்ள எட்டாவதுசேனையின் தளபதியான ஜெனறல் வான் பிளீற்அவர்கள் கருதினல் ஸ்பெல்மன் ஆண்டவருக்கு எழுதியிருக்கின்ருர்.

—ஹ்ரோமாபுரியின் சுற்ருடலிலே வத்திக்கான்விரைவில் பலம்பொருந்திய ஆறு ஒலிபரப்பிகளைக்கொண்டிருக்கும். இரும்புத்திரைக்குப் பின்னுலுள்ள 6 கோடியே 40 லட்சம் கத்தோலிக்கருடனும், கம்யூனிஸ்த சீனுவின் ஆதிக்கத்திலுள்ள 30 லட்சம் கத்தோலிக்கருடனும் தொடர்புவைத்துக் கொள்வதற்கென்றே இவைகள் விசேஷமாய் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

—2 கோடியே 84 லட்சத்து 25 ஆயிரம்ரூபாசெலவில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வத்திக்கானின் நவமான வானெலி நிலயத்தை அமைப்பதற்கென்று இத்தாலிய அரசாங்கம் வத்திக்கானுக்கு 1,335 ஏக்கர்நிலம் வழங்கியிருக்கிறது. இந்தநிலத்திலே தனக்குள்ள அரசியல் ஆதிக்கத்தையும் அது வத்திக்கானுக்கு விட்டுக்கொடுத்திருக்கிறது.

—அமெரிக்ககடற்படை பொறெஸ்ரல்எனும் நாமத்துடன் ஓர் நவீன மாதிரியான விமானங்கள்தாங்கிக் கப்பலைக் கட்டுவதற்குத் திட்டஞ்செய்திருக்கிறது. இது 3,500 பேரை ஏற்றிச்செல்லக்கூடியது. எண்ணெய் எடுக்காமலே மூன்றுமாதகாலம் சமுத்திரத்தில் தங்கிநிற்கத்தக்கது. 59,900 தொன் நிறைகொண்டது.

—மற்ருேர் யுத்தத்தின் ஆரம்பத்திலே எந்தஆகாயவிமானத் தாக்குதலையும் எதிர்த்துப் பிரித்தானியதேசத்தைக்காக்கும்படியாக இரண்டுலட்சம் ஆடவர்களைக்கொண்ட உள்நாட்டுக் காவற்படைஒன்று திரட்டப்படவிருக்கிறது. உள்நாட்டை மாத்திரம் பாதுகாப்பதே இதன் பிரதான கடமையாயிருக்கும்.

—1947-ம்ஆண்டுமுதல் 41 தேசங்களைத் தரிசித்துள்ள யாத்திரைக்கன்னிகையாகிய பரிசுத்தபாத்திமா அன்னையின் திருச்சுரூபமானது சிட்னி நகரிலே ஓர்சமாதான நவநாள்உற்சவத்துடன் தனதுஆஸ்திறேலிய சுற்றுப்பிரயாணத்தைச் சமீபத்திலே முடித்திருக்கின்றது.

## உங்களுக்குத் தெரியுமா?

1. 'சேனக்கிள்' (Cenacle) அதாவது சேன்னுக்கோலு என்பதேன்ன?

நம்திருமீட்பர் பாஸ்காவைக் கொண்டாடிக் கடைசி இராப்போசனஞ்செய்து திவ்விய நற்கருணையை ஏற்படுத்திய இடமாகிய ஜெருசலேமிலுள்ள ஓர் மேலறையாகும்.

2. அசீசிநகர் அர்ச். பிரான்சீஸ்கு ஓர் குருவானவரா?

இல்லை. அவர் தமது வாழ்நாள் முடிகிறவரையில் ஓர் தியாக்கோனுகவே இருந்துவந்தார்.

3. எந்த றேமைச் சக்கிரவர்த்தியுடைய ஆளுகையின் கீழ் அர்ச். பேதுருவானவர் வேதசாட்சியாகக் கொலையுண்டார்?

கி. பி. 67-ம் ஆண்டு நீரோஎன்னும் சக்கிரவர்த்தியுடைய ஆட்சியின்கீழ் தான் அவர் வேதசாட்சியாகக் கொலையுண்டு மரணமடைந்தார்.

4. சுவிசேஷகர்கள் நால்வரிலும் எவர் தமதுசுவிசேஷத்தைக் கிரேக்கபாஷையில் எழுதவில்லை?

அர்ச். மத்தேயுதான். இவர் அரேமேயிக் பாஷையில் தமது சுவிசேஷத்தை எழுதினுர்.

5. அப்போஸ்தலர்களிடையே யூதாசின் ஸ்தானத்துக்குத் தெரியப்பட்டவர் யார்?

அர்ச். மத்தேயு.

6. அப்போஸ்தலர்களிலே முதன்முதலாக வேதசாட்சியானவர் யார்?

அர்ச். பெரியயாகப்பரே. இவர் அக்கிளிப்பா ஏரோதனல் சிரச்சேதஞ் செய்யப்பட்டு வேதசாட்சியானுர்.

7. ஒருவர் குருவாகவருமுன் எத்தனை வயசுடையவராய் இருக்கவேண்டும்?

குறைந்தபட்சம் 24 வயசுடையவராய் இருக்கவேண்டும்.

8. எந்தச் சந்நியாசசபையார் அதிகமான பாப்புமார்களைத் திருச்சபைக்குக்கோடுத்திருக்கின்றனர்?

ஆசீர்வாதப்பர் சபையாரே. இவர்களில் 24 பேர் பாப்புமாராய் வந்திருக்கின்றனர்.

9. கருதினல்மார் திருச்சங்கம் பூரணமாக நிரப்பப்படும்போது எத்தனைகருதினல்மாரைக் கோண்டிருக்கும்?

70 கருதினல்மாரைக் கொண்டிருக்கும்.

10. வேதசாட்சியாகாது இயற்கையானமரணம் அடைந்த ஒரேயோரு அப்போஸ்தலர் யார்?

அர்ச். அருளப்பரே. இவர் றோமாபுரியிலே எரிகின்ற எண்ணெய்க் கொப்பரைக்குள் அமிழ்த்தப்பட்டும் காயமடையாதுதப்பிப் பின்னர் எபேசஸ் நகரிலே கி. பி. 100-ம்ஆண்டு இயற்கையான மரணமடைந்தார்.

11. வருடமுழுவதிலும் திவ்விய பூசையில் வாசிக்கப்படும் அதிகம் சுருக்கமான ஞாயிற்றுக்கிழமைச் சுவிசேஷம் எது?

யேசுநாதரின் விருத்தசேதனத் திருநாளாகிய தைமாசம் 1-ந் திகதி புதுவருடப்பிறப்பன்று வாசிக்கப்படும் சுவிசேஷப்பகுதியே. இது 35 சொற்களைத்தானும் உடையதல்ல. திருநாமத்தின்திருநாளிலும் இது வாசிக்கப்படுகிறது.

12. காற்றுக்குப் பாரம் உண்டா?

ஆம். கடல்மட்டத்தில் ஒருகன அங்குலக் காற்றின்பாரம் $14\frac{3}{4}$ ரூத்தல். நாம் ஒவ்வொருவரும் 12 முதல் 14 தொன் நிறையுள்ளகாற்றைச் சுமக்கிருேம். எல்லாப்பக்கங்களிலும் சமபாரம் நம்மைத்தாக்குவதால் இப்பாரத்தை நாம் உணர்வதில்லை. உடலினுள் இருக்கும்காற்றும் இதே பாரமுள்ளது. இந்தக்காற்று முழுவதையும் வெளியே இழுத்துவிட்டால் உடனே நமதுஉடல் நொறுங்கிவிடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க சமாச்சாரம்

**கத்தோலிக்க பிரதிநிதிகள்**

பிரித்தானிய பொதுத்தேர்தலிலே புதியபாராளுமன்ற அங்கத்தவர்களாய் 23 கத்தோலிக்கர் தெரியப்பெற்றிருக்கின்றனர். இத்தொகை முந்திய பாராளுமன்றக் கத்தோலிக்க அங்கத்தவர்கள் தொகையிலும் ஒருவரால் அதிகரித்துள்ளது. இவர்களில் 15 பேர் தொழிற்கட்சியினர். 6 பேர் பரம்பரைக்கட்சியினர். ஒருவர் ஐரிஷ்குடியரசுக் கட்சியினர். ஒருவர் பாகுபாட்டு எதிர்க்கட்சியினர். அபேட்சகராய்வராத ஒருவரைத்தவிர முந்தியபாராளுமன்ற அங்கத்தவர்களாயிருந்த எல்லாக் கத்தோலிக்கருமே திரும்பவும் தெரியப்பட்டிருக்கின்றனர். 23 பேரிலும் நால்வர் ஸ்திரீஅங்கத்தவர்கள்.

**பாப்பரசரின் மகிமைவிருது**

சான்சிபார்நாட்டின் சுல்தான் அரசர் சிம்மாசனமேறிய 40-ம் ஆண்டுநிறைவுவிழா வருகிறமார்கழிமாதம் 9-ந்திகதி வருகின்றது. இதைமுன்னிட்டு அவரைக்கௌரவிக்குமுகமாகப் பரிசுத்தபாப்பரசர் அவருக்குப் பத்திநாதரது பரிமேலர்வரிசைக்குரிய பெரியசிலுவை விருதைச் சன்மானித்திருக்கின்றார். இந்தச்சுல்தான் அரசரும், இவர் முன்னோரும் அந்நாட்டிலே கத்தோலிக்க மிஷன் 1862-ம்ஆண்டு முதன்முதலாக அடியிடப்பட்ட காலமுதல் அதன் மட்டில் எப்போதுமே உதாரசிந்தையுடன் நடந்துவந்திருக்கின்றனர்.

**சற்பிரசாத மகாநாடு**

ஸ்பானியதேச பார்சலோனநகரிலே அடுத்த வைகாசிமாதம் நடந்தேறவிருக்கின்ற சர்வதேச சற்பிரசாத மகாநாட்டின்போது, அங்கு சமுகமளிக்கும் 2,000 அமெரிக்கருக்கும் "இன்டிபென்டன்ஸ்", "கன்ஸ்ரிரியூஷன்" எனும் இருபிரயாணக் கப்பல்களும் மிதக்கின்ற ஹொட்ரேல்களாக இருந்துவரும். ஒருகப்பலில்செல்லும் அமெரிக்ககோஷ்டிக்கு நியூயோக்நகர் அதிமேற்றிராணியாரானகருதினல் ஸ்பெல்மன் ஆண்டவரும், மறுகப்பலில் செல்லும் அமெரிக்ககோஷ்டிக்குச் சிக்காகோநகர் அதிமேற்றிராணியாரானகருதினல் ஸ்றிற்ச் ஆண்டவரும் தலைமைவகிப்பார்கள். குறைந்தபட்சம் 12 கருதினல்மாரும், அநேக மேற்றிராணிமாரும் மகாநாட்டுக்குச் சமுகமாவார்கள்.

**மெக்சிக்கோவில் சுதந்திரம்**

1953-ம்ஆண்டுமுதல் 1958-ம் ஆண்டுவரையிலே மெக்சிக்கோநாட்டின் பிரசாதிபதி பதவிக்கு ஓர்அபேட்சகராகத் தம்முடைய தெரிவை அங்கீகரித்துள்ள டக்றர் அல்போன்சோ கோட்ரினெஸ்அவர்கள் அந்நாட்டிலே சமயவிஷயங்களில் மக்களுக்குப் பூரணசுதந்திரம் அருளுவதாக வாக்களித்திருக்கின்றார். அங்கே இவர் தற்போது அதிகாரத்தில் இருந்துவருகின்ற அரசாங்ககட்சியின் அபேட்சகராவர். உலகயுத்தங்கள் இரண்டுக்குமிடையிலேமெக்சிக்கோவில் கத்தோலிக்கதிருச்சபையை விரோதித்து உக்கிரவேதகலாபனை நடைபெறலாயிற்றென்பது ஈண்டுகுறிப்பிடத்தக்கது.

**முத். பத்தாம் பத்திநாதர்**

சென்ற ஆனிமாதம் முத்திப்பேறுபட்டம் அருளப்பெற்றபத்தாம்பத்திநாத பாப்பானவருக்கு அர்ச்சியசிஷ்டபட்டமும் அருளுமாறு கேட்டு உலகின் சகல பகுதிகளிலுமிருந்தே தொகையானமனுக்கள்பரிசுத்தஸ்தானத்தினிடம்போய்க் குவிந்தவண்ணமாய் இருப்பதாகலண்டன்நகரில் பிரசுரமாகும் "யூனிவேர்ஸ்" என்ற பிரபல கத்தோலிக்க பத்திரிகையின் றோமாபுரி நிருபர் அறிவிக்கின்றார். இவற்றிலே அதிகம்பிந்திய மனுக்களில்ஒன்று, றோமாபுரியிலே சென்றமாதம்கூடிய சாதாரண கத்தோலிக்கரின் அப்போஸ்தலத்துவ உலக மகாநாட்டிற்குச் சமுகமளித்த மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமாரிடமிருந்துகிடைக்கலாயிற்று. "பத்தாம் பத்திநாதருக்கு முத்திப்பேறுபட்டம் அருளியமையானது பரலோகத்தில் பூரணமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இந்த அர்ச்சியசிஷ்ட பாப்பானவரின் சலிகையாலே மிகஏராளமான அனுகூலங்களும், வரப்பிரசாதங்களும் பெறப்பட்டிருக்கின்றன" என்று இத்தாலியிலே வெனிஸ்நகர பத்திறியாக்குவான அகொஸ்ரின் அதிமேற்றிராணியாரைத் தலைமையாகக்கொண்டு வெனிஸ் மாகாண மேற்றிராணிமார் அனுப்பியுள்ளமனுவிலே அறிவித்திருக்கிறார்கள்.

**சீனாவும் மிஷனரிமாரும்**

இன்னும்சில மாசங்களுக்கிடையில் கம்யூனிஸ்த சீனதேசம் பிறதேச கத்தோலிக்கமிஷனரிமார் எவருமே இல்லாதிருக்குமென்று மறினோல் சபையைச்சேர்ந்த ஓர் மிஷனரியாகிய வண. தோமஸ் போவர்சுவாமியார் அறிவிக்கின்றார். சீனாவிலே இன்னும் சுதந்திரமாய் இருந்துவருகின்ற பிறதேச மிஷனரிமாரெல்லாம் விரைவிலே சிறையில் வைக்கப்படுவர் அன்றேல் நாடுகடத்தப்படுவரென இவர் எதிர்பார்க்கின்றார். அப்போது முழுப்பாரமும் சீனர்களான அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரிலும், 2,500 பேருக்குமேற்ற சீனக்குருமாரிலும் சுமத்தப்படுமென அவர் கூறுகின்றார். தற்போது அங்கே பிறதேச மேற்றிராணிமார் அல்லது அப்போஸ்தலிக்க தலைவர்களாய்ப் 18 பேர் சிறைவைக்கப்பட்டும், மற்றும் 6 பேர் தங்கள் மனைகளிலேயே காவலில் வைக்கப்பட்டுமிருக்கின்றனர். பிறதேச மேற்றிராணிமார் எழுவர்நாடுகடத்தப்பட்டிருக்கின்றனர். 200 குருமார் சிறைவைக்கப்பட்டும், 16 சீனக்குருமார் கழுவேற்றப்பட்டும் மிருக்கின்றனர்.

---

சம்பத்திரிசியார் கல்லூரி

## கீழ்ப்பாடசாலை 1952.

மேற்படி கல்லூரியின் கீழ்ப்பாடசாலையில் 1952-ம் ஆண்டு 5-ம் வகுப்பில் சேரவிருக்கும் பிள்ளைகள், 1951-ம் ஆண்டு மார்கழிமாதம் 1-ந் திகதி சனிக்கிழமை நடக்கவிருக்கும் பிரவேசப் பரீட்சையில் பங்குபற்றவேண்டும்.

1952-ம் ஆண்டு 4-ம் வகுப்பில் சேரவிருக்கும் பிள்ளைகள், 1952-ம் ஆண்டு தைமாதம் 12-ந் திகதி சனிக்கிழமை நடக்கவிருக்கும் பிரவேசப் பரீட்சையில் பங்குபற்றவேண்டும்.

இந்தப் பிரவேசப் பட்ரீசைக்கு உரிய மற்றும் நிபந்தனைகளை அறிய விரும்புகிறவர்கள் கீழ்ப்பாடசாலையின் வண. தலைவர் சுவாமியாருக்கு நேரகாலத்துடன் மனுப்பண்ணி உத்தரவு பெற்றுக்கொள்ளவேண்டும்.

---


1952-ம் ஆண்டின்

## மாதாந்தர ஷீட் காலண்டர்

உயர்ந்த வேலை! குறைந்த விலை! முந்துங்கள்!

இங்கிலிஷ்-தமிழ் தேதிகளுடன் முக்கிய திருநாட்கள்,
இந்து முஸ்லிம் புத்தமத பண்டிகைகளுடன்
பல வர்ணங்களில்
மகாவந். திரிகோணமலை மேற்றிராணிஆண்டவர் படத்துடன்
அச்சிடப்பட்டுள்ளது.

விலை ஒன்றுக்குச் சதம் 50 மட்டும்.

இனம்: ஒரு டசின் வாங்கினல் ஒரு காலண்டர் இனம்.
(தபாற் செலவு பிரத்தியேகம்.)

கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:—

Rev. Fr. Superintendent,
Catholic Orphanage Press,
Batticaloa.


---

**தாய்மையைப் போற்றுங்கள்**

(சென்றவாரத் தொடர்ச்சி)

கற்பத்தடைஎன்பது பெண் இனத்தையே அவமதிக்கும் செயல். சீர்கேட்டையும் ஒழுக்கக்குறைவையும் வலிய வருந்தியழைக்கும் வரப்பிரசாதம். கணவனுக்கும் மனைவிக்குமுள்ள பாந்தவத்தை இலகுவில் பிரித்துக்கட்டும் மகாசத்துரு. மித்திரவாத்சல்யத்தைத் தொலைக்கும் மாய்மாலம். மிருகஉணர்ச்சிக்கு மெருகுதீட்டும் பேய்மாலமே கற்பத்தடை. சமூகத்தின் அஸ்திவாரம் குடும்பம். குடும்பத்தின் முதுகெலும்பு தாய். தாயுலகம் பலமுள்ளதாக இருந்தால்தான் தேசம் பலமுள்ளதாகஇருக்கும். ஒருதுளிவிஷம் ஒருபானைபாலைக் கெடுத்துவிடுவதுபோல் கற்பத்தடை இயக்கம் தேசத்தின் வலிமையையே கெடுத்துவிடும் என்பது திண்ணம்.

கற்பைக் காப்பாற்றுவதற்காக அக்கினிப் பரீட்சையையும், வாளாயுதத்தையும் பொருட்படுத்தாது கலங்கரைத் தீபங்களாகவிளங்கிய சீதை, சம்யுக்தை, நளாயினி, சாவித்திரி எனும் மாதுசிரோமணிகளைப் பற்றிப் பெருமை பாராட்டும் நாட்டில்—கணவனே தெய்வம், கற்பே பிரதானம் எனப் போற்றிப் பேணும் புண்ணிய நாட்டில்—மாசுபடிந்தசெயலான கற்பத்தடையைப் பெண்ணினங்கள் கையாளவேண்டுமென்று விரும்புவது, கற்புத்தெய்வங்களான தாய்மார்களை அரசாங்கம் அவமதிப்பதோடு பெண்ணினத்தையே ஏனோதானோ, எக்கடைச்சரக்கோ என்று பரிகசிப்பதுமுண்டாகும். தொட்டில் ஆட்டும்கரம், உலகை ஆளும் கரம்என்பதை மறந்துபோகவேண்டாம். கற்பத்தடை பண்ணிக்கொள்ளும் பெண்களுக்கு இயற்கையாயுள்ள தாய்மையின் சாதுத்தன்மைமாறி மூர்க்ககுணம் வந்துவிடும்என்பது விஞ்ஞானஆராய்ச்சி. குழந்தைமீதுள்ள பாசம் கொஞ்சமும் இருக்காது. அன்றியும் ஆயுள் விருத்திக்கும் தீமை விளைக்கும் என்பது தேற்றம்.

முன்னொருகால், அமெரிக்க மாது மேயோ இந்தியாவின் நிலைமையை அறிந்துபோக இந்நாட்டைச் சுற்றிப்பார்த்தபின் புஸ்தகமொன்றுஎழுதிவெளியிட்டாள். அவற்றில் இந்தியாவின் வறுமைக்குக் காரணம், அதிக சனப்பெருக்கம் என்றும், அதனல், இந்தியமாதர்கள் எல்லோரும் கற்பத்தடையைக் கையாளவேண்டுமென்றும் ஆலோசனை கூறியிருந்தாள். உடனே நாடெங்கணும் வீறிட்டெழுந்து, மேயோவின் புத்தகம் இந்தியாவை அவமதிக்கும் கடைகெட்ட குப்பைச்சரக்கென்று ஒதுக்கித்தள்ளியதுடன், அவளின் கூற்றை, அண்ணல் காந்திஜி முதல் சர்வசனங்களும் கண்டனம பண்ணினர்கள்.

---

**நன்றித்துதி**

கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாரிடத்து எனது தேவைகளை நோக்கிச் செவ்வாய்க்கிழமைதோறும் அவரின் திருச்சுருபத்தைச்சந்தித்து வேண்டுதல்செய்து வந்தேன். நான் கேட்டுக்கொண்ட காரியங்கள் எல்லாம் அனுகூலம் அடைந்துவிட்டன. அர்ச். அந்தோனியாரின் திருநாமம் எவ்விடத்தும் புகழப்படுவதாக. எனது நேர்த்திப்படி இத்தைப் பத்திரிகையில் பிரசுரம் செய்கின்றேன்.

சூராவத்தை M. P. R.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ் சபை மாதாந்தகூட்டம் இம்மாதம் 30-ந்தேதி வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணிக்கு அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். அவ்வமயம் 3 சகோதரர்கள் சபையின் வார்த்தைப் பாடு எடுப்பார்கள். மார்கழிமாதத்தில் பரிபூரணபலன்கள் அடையக் கூடிய தேதிகள் பின்வருமாறு:— 8, 9, 12, 15, 25. மார்கழி 8-ம் தேதியும்; 25-ம் தேதியும் பொதுப்பாவமன்னிப்பு இருக்கும்.

A. S. FRANCIS OF MARY
for Director

## திருநாள் அட்டவணை

மார்கழிமாதம் 1951

| | | | |
|---|---|---|---|
| சனி | 1 | அர்ச். எலிசியார் | (வெ) |
| ஞா | 2 | ஆகமன கால. 1-ம் ஞாயிறு— அர்ச். பிபியானம்மாள் | (ஊ) |
| திங் | 3 | அர்ச். சவேரியார் | (வெ) |
| செவ் | 4 | அர்ச். கிறிசோ. இராயப்பர் | (வெ) |
| புத | 5 | அர்ச். சபாஸ் | (ஊ) |
| வியா | 6 | அர்ச். நீக்கோலாஸ் | (வெ) |

சத்தியவேத
# பாதுகாவலன்

1951-ம் ஆண்டு
கார்த்திகைமாதம் 29-ந்திகதி

## ஆசா. யோசேவாஸ் முனிவரின் நூற்றாண்டு விழா

இலங்கை அப்போஸ்தலரெனச் சிறப்பாக அறியப்படுகிறவரான ஆசா. யோசேவாஸ் முனிவர் கோவையிலே பெனோலிம் எனுமிடத்தில் 1651-ம் ஆண்டு சித்திரைமாதம் 21-ந் திகதி ஜனனமாயினர். அதனால் அவரது ஜனன மூன்றாம் நூற்றாண்டு நிறைவுவிழா இவ்வாண்டு சித்திரைமாதம் 21-ந் திகதிவந்துபோயிற்று. கோவை நகர் இதனைப்பெரிதும் குதூகலத்துடன் அப்போது கொண்டாடியது. இப்போது அம்முனிவர் தமது ஆருயிரைத்தானும் பறுவாய்பண்ணாது அத்துணை பெரும் தியாகங்கள்மத்தியில் அநேகவருடகாலம் அருந்தொண்டாற்றிக்கடைசியாகத் தமது காயத்தையும் அர்ப்பணஞ்செய்யும் அரியசலாக்கியத்தைப்பெற்ற ஸ்ரீலங்காவும் தனது அப்போஸ்தலரின் இந்தப்பெருவிழாவைக் கொண்டாடும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுள்ளது.

எமது செல்வநாட்டிலே இன்று விருத்திபெற்றுச்செழித்தோங்கி வருகின்ற கத்தோலிக்க திருச்சபையை அடியிட்டவரென்று சகலராலும்ஒப்புக்கொள்ளப்படுகிறவர்யார்? கீழ்நாடுகளிலே கத்தோலிக்கதிருமறை அளித்துள்ள அருந்தவப் புதல்வர்களில் ஒருவராய்க் கொண்டாடப்படுகிறவர் யார்? ஆசா. யோசேவாஸ் எனும் குருமுனிவரே. இவர் அதிககஷ்டங்கள் நிறைந்த ஓர் காலத்திலே எமது நாட்டில் பெரிதும்வீரத்துவமாகத் திருத்தொண்டாற்றிய ஓர் பரிசுத்த குரவர் மாத்திரமல்ல, ஆனால், கிறீஸ்துநாதரிடமாக ஆத்துமாக்களை வெற்றிகொள்ளுமாறு எம்திருவேதத்தை அடியிடுவதும், விசுவாசிகளை ஒருங்குதிரட்டுவதும், திடபத்தியாய் இருக்கும்படியாக அனைவர்க்கும் உற்சாகமூட்டுவதும், அவர்களை அணிவகுத்து வேண்டிய குருமாரைக் கொடுப்பதும், ஆயர்களையும், ஆடுகளையும் ஒழுங்குபடுத்தித் தக்கவாறு ஆட்சிசெய்வதுமாகிய ஓர் அப்போஸ்தலரின் திருத்தொண்டை நடத்தும்படியாகத் தேவபராமரிக்கையாலே தெரியப்பெற்றவராயும் இருந்தார். ஆகவே, இலங்கைத்திருச்சபைச் சரித்திரத்திலேஅவர்வகித்திருக்கும் இணையற்ற ஸ்தானத்தையும், அவர் மட்டிலே நமக்குள்ள ஆழ்ந்த நன்றிக்கடமைப்பாட்டையும் சிந்தித்துப் பார்க்கும்போது, அவரது ஜனன திரிசதாப்தவிழாவைச் சிறப்பாகக் கொண்டாடுவது நீதியாகுமன்றோ!

கொழும்பு அதிமேற்றிராணியாரும், இலங்கை மேற்றிராணிமார்களும் ஒன்றுசேர்ந்து குருமாருக்கும்; விசுவாசிகளுக்கும் விடுத்துள்ள ஓர் நிருபத்திலே, ஆசா. யோசேவாஸ் முனிவர் எமதுநாட்டில்செய்துள்ள வீரத்துவதொண்டுகளை அனைவர்க்கும் எடுத்துக்காட்டி, இந்தநூற்றாண்டுவிழா தகுந்த ஆடம்பர வைபவங்களுடன் கொண்டாடப்படவேண்டிப் பின்வருமாறு பணித்திருக்கின்றார்கள்.

1. இலங்கையிலே யோசேவாஸ்முனிவரின் மகத்தான அப்போஸ்தல தொண்டையிட்டுச் சர்வேசுரனுக்கு நன்றியறிந்த தோத்திரமாக மார்கழிமாதம் 2-ந்திகதி ஞாயிறன்று ஒவ்வோர் மீசாமிலும் இயன்றவரையிலே பாடற்பூசை நிறைவேற்றப்பட்டு, எமது நாட்டின் மனந்திரும்புதலுக்காகவும், இந்தத்தேவதொண்டர் மகிமையடையும்படியாகவும்செபஞ்செய்ய வேண்டும்.

2. பாடற்பூசையின் போது, இலங்கைப் பெரியஅப்போஸ்தலரான இவரின் சீவியவரலாற்றையும், தேவதொண்டையும் பற்றி ஓர்பிரசங்கம் செய்யப்படவேண்டும்.

3. சாயந்தரம் திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தின்போது "தெதேயும்" என்னும் தேவதோத்திரகீதம் பாடப்படவேண்டும்.

4. விசுவாசிகளின் பகிரங்க கொண்டாட்ட விஷயமாய் விசுவாசிகள் தங்கள் விசாரணைக் குருமாரது வழிநடத்துகையின் கீழ் விழாவுக்குரிய சிறப்பைஅருள முயற்சியெடுக்கவேண்டும்.

### யுத்தஞாபகசின்னம்

முதலாவது உலகயுத்த ஞாபகசின்னம் பலவருடகாலமாக கோல்பேஸ் மைதானத்தில் நிறுவிநின்றது. அது பின்னர் அங்கிருந்து நீக்கப்பட்டுத் தற்போது விக்ரோறியாப் பாக்கத்திலே திரும்பவும் நிறுவப்பட்டிருக்கிறது. ஓர் மணிக்கோபுரம்போன்ற இது 120 அடி உயரமுடையதாய்க் கொழும்புக் காட்சி நடந்தேறப்போகும் இடத்துக்கு மேலாகக் காட்சியளிக்கின்றது. டில்லிநகர் அரசாங்கமாளிகையை நிர்மாணித்த பேரானசிற்பியாகிய சேர்எட்வாட் லுட்யென்ஸ் என்பவரே இதனையும் நிர்மாணித்தார்.

## ஆகமனகாலத்தின் 1-ம் ஞாயிறு

### சுவிசேஷ வாசிப்பு
(லூக். 21 : 25—33)

அக்காலத்தில் யேசுநாதர் தம்முடைய சீஷர்களைநோக்கிச் சொன்னதாவது: சூரியனிடத்துஞ் சந்திரனிடத்தும் நட்சத்திரங்களிடத்தும் அதிசயக்குறிகள் இருக்கும். சமுத்திரமும் அலைகளும் இடுங் கலக்கமுள்ள இரைச்சலைப்பற்றிப் பூமியில் சனங்களுக்கு உபத்திரவமும் உண்டாகும். பூவுலகமுழுமையும் சம்பவிப்பவைகளைக்கண்டு மனிதர் அச்சத்தினாலும் ஏக்கத்தினாலும் தயங்குவார்கள். ஏனெனில், வானங்களின்வல்லமைகள் அசைக்கப்படும். அப்போது மனுமகன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தின்மேல் வருவதைக் காண்பார்கள். ஆனால், இவைகள் சம்பவிக்கத்தொடங்கும்போது நீங்கள் அண்ணாந்துபார்த்து உங்கள் தலையை நிமிர்த்துங்கள். ஏனெனில், உங்கள் இரட்சணியஞ் சமீபித்திருக்கின்றது என்றார். மீளவும் அவர்களுக்கு ஓர் உவமையைத் திருவுளம்பற்றினர். அதாவது அத்திமரத்தையும் மற்றச் சகலவிருட்சங்களையும் பாருங்கள். அவைகள் காய்க்கத்துவக்கும்பொழுது கோடைகாலஞ் சமீபித்திருக்கிறதென் றறிகிறீர்கள். அப்படியே நீங்களும் இவை சம்பவிக்கிறதைக் காணும்போது சர்வேசுரனுடைய இராச்சியம் சமீபமாய் இருக்கிறதென்று அறிந்துகொள்ளுங்கள். இவையெல்லாம் நிறைவேறுகிறவரைக்கும் இச்சந்ததி ஒழிந்துபோவதில்லையென்று நிச்சயமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன். வானலோகமும் பூலோகமும் ஒழிந்துபோகும்; என்வாக்கியங்களோவெனில் ஒழிந்துபோகாஎன்று திருவுளம் பற்றினர்.

கிறீஸ்துவே, உமக்குப் புகழ் உண்டாவதாக.

**********************
## சந்தாதாரருக்கு ஓர் வேண்டுகோள்

"சத்தியவேதபாதுகாவலன்" சந்தாதாரருக்கு 1951-ம் ஆண்டு முடிகிறவரையிலே அவரவர் நிலுவைப் பணத்தைப் பற்றிய அறிவித்தல் அனுப்பப்பட்டிருந்தும் சிலர் அதைப்பற்றி இன்னுமேகவனியாமல் இருந்துவருகின்றனர். இவர்கள் தங்கள் நிலுவைப்பணத்தைத் தாமதமில்லாது அனுப்பிவைக்கும்படியாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். 1952-ம் ஆண்டுச் சந்தாப்பணத்தையும் அடுத்த பங்குனிமாதம் 31-ந் திகதிக்குமுன் அனுப்பிவைக்குமாறு எல்லோரும் கேட்கப்படுகின்றார்கள். பணம் அனுப்பும்போது தங்கள் சந்தா நம்பரையும் குறித்து அனுப்புக.
**********************

## சுதேசவர்த்தமானம்

### பி. ஏ. பரீட்சைப்பேறு

இவ்வருடம்நடைபெற்ற லண்டன் சர்வகலாசாலை பி. ஏ. பரீட்சையில் இரண்டாவதுபிரிவிலே நமது அச்சியந்திரசாலை மனேஜரான வண. பிரான்சீஸ் ஜேக்கப் ஸ்ரன்னிஸ்லாஸ் சுவாமியாரும், திருக்குடும்ப கன்னிகாமடத்தைச்சேர்ந்த சங். சிஸ்றர் கத்தறின் மல்விலில் என்பவர்களும் — மூன்றாவது பிரிவிலே யாழ்ப்பாண மேற்றிராசன கத்தோலிக்க பாடசாலைகளின் பிரதமமுகாமைக்காரரான வண. ஜோண் அல்வ்ஸான் மதுரநாயகம்சுவாமியார், சங். சிஸ்றர் செயம்மா க்றிஸ்தோப்பிள்ளை, செல்வி வயலெற் பியாத்திறிஸ் அக்னேஸ் இம்மனுவேல், ஊர்காவற்றுறை, அர்ச். அந்தோனியார் கல்லூரி ஆசிரியர் பி. மரியநாயகம், சம்பத்திரிசியார்கல்லூரி ஆசிரியர் இராமலிங்கம் சச்சிதானந்தம் என்பார்களும் அரங்கேறியிருக்கிறார்களென அறிந்து சந்தோஷமானோம்.

### யாழ்ப்பாண நகரசங்கம்

யாழ்ப்பாண நகரசங்க பிரதிநிதிகளின் தெரிவு மார்கழிமாதம் 1-ந்திகதியாகிய நாளைநின்றுவரும் சனிக்கிழமை நடைபெறவிருக்கிறது. பதினைந்துவட்டாரங்களிலும் ஒருவட்டாரத்துக்கு அபேட்சகராய்நின்ற ஒருவர் போட்டியின்றித் தெரியப்பட்டுள்ளனர். அதனால் பதினான்குவட்டாரங்களிலும் அன்று தினம் ஒருங்கே தேர்தல்நடந்தேறும்.

### களவிலேவடித்த சாராயம்

யாழ்ப்பாணத்திலுள்ள மதுபரிபாலன ஸ்றேஷன்கள் பலவற்றைச்சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் 40 பேர்சேர்ந்து மதுபரிபாலன உதவித்தலைவர்களான ஏ. முருகேசு, ஒலிவர் டி. சொய்சா என்பவர்கள் தலைமையிலே சென்ற வெள்ளிக்கிழமை இரவு உரும்பராயிலுள்ள ஓர் வீட்டைப் பரிசோதித்து அதிலே சட்டவிரோதமாக வடிக்கப்பெற்ற ஒரு பெருந்தொகையான சாராயத்தைக் கைப்பற்றியதுடன் சாராயம்வடிக்கும் கருவிகளுடன் சாராயம் வடித்தானென்று சொல்லப்படும் ஓர் மனிதனையும் கைதுசெய்தார்கள்.

### செனற்சபை அங்கத்தவர்கள்

சேர் ஜெரூட் விஜெயக்கூன், சேர் உக்வத்தை ஜயசுந்தர, திரு. எல். எல். ஹண்ரர், திரு. எஸ். ஆர். கனகநாயகம், சேர் பிறங் குணசேகர என்பவர்கள் செனற்சபை அங்கத்தவர்களாகக் கவர்னர்—ஜெனறலாலே மீளவும்தெரிவு செய்யப் பெற்றிருக்கிறார்கள். சேர் பறீட் றூசிக், திரு. டபிள்யு. ஏ. பி. சொய்சா, இராசவாசல் முதலியார் எஸ். ரி. பி. றெட்றிக்கோ எனும் மூவரையும் செனற்றர்களாக ஐக்கியதேசியக்கட்சி திரும்பவும் தெரிவுசெய்திருக்கிறது. எதிர்க்கட்சிகள் திரு. பி. நாகலிங்கம், திரு. பெரிசுந்தரம் என்பவர்களைச்செனற்றர்களாகத் தெரிவுசெய்திருக்கின்றன.

### சாவகச்சேரிப் பட்டினசங்கம்

சாவகச்சேரிப்பட்டினசங்க அங்கத்தவர்கள் தேர்தல் சென்றசனிக்கிழமை நடைபெற்று அதிலே எட்டுவட்டாரங்களுக்கும் வரியிறுப்பார் சங்கத்தின் அபேட்சகர்களாக நிறுத்தப்பட்டிருந்த எண்மரிலும் எழுவர் வெற்றிபெற்றார்கள். அரசடி வட்டார அங்கத்தவராயிருந்துவந்த திரு. பி. தம்பிப்பிள்ளை ஒருவரே திரும்பவும் தெரிவுசெய்யப்பட்டனர். பட்டினசங்க தலைவராயிருந்த திரு. எஸ். கே. திரவியநாயகம் அவர்களும் தமது ஸ்தானத்தை இழந்தனர்.

### முத்துச்சலாபச்செலவு

அடுத்தவருடம் மாசி, பங்குனி, சித்திரைமாதங்களிலே நடத்தத்தீர்மானமாயிருக்கும் முத்துச்சலாபத்தைநடத்திவைக்க 3,70,000 ரூபா செலவேற்படுமென மதிப்பிடப்படுகிறது. ஒவ்வோர்குளிகாரரும் தினமும்குளிக்கின்ற முத்துச்சிப்பிகளிலே மூன்றில்இருபங்கை அரசினருக்குக் கொடுக்கவேண்டுமென்ற நிபந்தனையின்பேரிலே சிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிகள் குளிக்கவரும் எந்தக்குளிகாரருக்கும் லைசென்ஸ்கள் வழங்கப்படவேண்டுமென்று ஆலோசனைகூறப்பட்டிருக்கிறது. அவ்வாறு பங்குகொடுபடுமானல் அரசினருக்கு 1 கோடியே 60 லட்சம்சிப்பிகள் கிடைக்குமெனச் சொல்லப்படுகிறது.

### மன்னூரும் முட்டைவியாபாரமும்

மன்னூர்டிஸ்திறிக்கிலே முட்டைகள் சேகரித்துஉதவும் ஏஜன்றுகளாகக் கிராமாபிவிர்த்திச்சங்கங்கள் நியமிக்கப்பட்டிருப்பதிலிருந்து அங்குசனங்கள் கோழிகளை அதிகமாகவளர்க்கச் சந்தர்ப்பங் கிடைத்திருக்கிறது. அரசாங்க விற்பனவுவசதிப்பகுதியே இந்தநியமனத்தைச் செய்துள்ளது. விற்பனவுவசதிப்பகுதி உத்தியோகஸ்தர்ஒருவரின் பொறுப்பிலே அனுப்பப்படும் லொறி ஒன்று அச்சங்கங்களால் சேகரிக்கப்பட்டமுட்டைகளை வாங்குவதற்கென வாரம்ஒருமுறை அச்சங்கங்கள்இருக்கும் கிராமங்களைச்சந்தித்து முட்டை ஒன்று 15 சதவீதம் அந்தந்தஇடத்தில் தானே விலைகொடுத்து வாங்கிச்செல்லும். வழமையிலேஅங்கு பத்துச் சதத்துக்குத்தானும் ஓர்முட்டை விற்றுக்கொள்ளமுடியாது.

### லொறிவிபத்து

வில்லுண்டி-கொட்டடித்தெருமார்க்கமாகச்சென்றதிங்கட்கிழமை சென்றுகொண்டிருந்த லொறிஒன்று ஓர்சைக்கிளில்மோதி ஏற்பட்டவிபத்தின்காரணமாகச் சுல்தான்எனும் 35 வயதுடைய ஓர்வியாபாரியும், ஆறு வயசுள்ள கணேசுஎனும்சிறுவனும் அந்தஇடத்திற்றனே கொல்லப்பட்டார்கள். சைக்கிளில்சென்றுகொண்டிருந்த சுல்தானில்மோதியபின் இந்தலொறி சிறுவன்மீது ஏறியதாகச் சொல்லப்படுகிறது.

### நத்தாருக்கு இரண்டுநாள்

மார்கழிமாதம் 24-ந்திகதியையும் அரசாங்கவிடுமுறைநாளாக 1952-ம் ஆண்டின் புதியவிடுமுறைத்திட்டத்தில் சேர்த்துக்கொள்வதென்று அரசினர் முடிவுசெய்திருக்கின்றனர். ஆனிமாதத்திலே உத்தியோகபூர்வமாகக் கொண்டாடப்பட்டுவரும் மன்னர்ஜனனதினம் விடுமுறைநாளாக இருக்கமாட்டாது. வருகிறமார்கழிமாசத்திலே சென்றவருடங்களைப்போல விடுமுறைநாட்கள் இருக்கும்.

### சச்சிதானந்த ஆச்சிரமம்

சென்றமாசம் 11-ந்தேதி கன்னிமரியம்மாள் தேவமாதாவான திருநாள் அன்று இந்திய கத்தோலிக்கதிருச்சபை முக்கியமான ஒருஎல்லையைத் தாண்டிற்று. அர்ச். பிரிற்றோ அருளப்பர், வீரமாமுனிவர்போன்ற திருஷ்யும், விசாலமனதும் படைத்த மகான்கள்காலத்து வேதப்பொலிவு புத்துயிர் தோன்றி எழுந்துள்ளது என்றும் நினைக்கும்படியாயிருக்கிறது. "எவாஞ்செலியி ப்றேக்கோனெஸ்" என்ற நிருபம்வெளிவந்த வருஷத்திலே, அதில் அடங்கிய அரியகருத்துகள் சிலவற்றைச் செயலளவில் நிறைவேற்றிவைக்கும் திட்டத்துடன்தோன்றிய முனிவர்குலம் உருப்பெற்றது முழுதும் தற்செயலென்று சொல்லிவிடமுடியுமா?

திருச்சபை எந்நாட்டிற்கும் புறம்பானதுஅன்று. எத்தகைய நாகரீகத்திற்கும், கலைப்பண்பிற்கும் அந்நியமல்ல. எம்மக்களுக்கும் பொதுவானது. எல்லோரையும் புனிதப்படுத்திப் பெரும்வாழ்வுவாழச் செய்யவல்ல திருச்சபை ஒவ்வொருநாட்டு நாகரீகத்தையும் கலைப்பண்பையும் தனதாக்கி அதற்குப் புதுமெருகுகொடுத்து வளர்க்கும் தன்மையது. பாரதநாட்டுப் பழம்பெருமை, நாகரீகச்சிறப்பு, கலைவளம் மகத்தானது. அதனுடைய தெய்வப்பற்றும் அத்தகையதே.

வறியவர்களுக்கு உதவியாக

## நத்தார்விழா விற்பனவு

நத்தார் விழாக் காலத்திலே வறியவர்களுக்குத் தருமம் வழங்குதற்குச் சகாயமாய்ச் சம்பத்திரிசியார் கல்லூரி மண்டபத்தில் வருகிற மார்கழி மாதம் 8-ம், 9-ம் திகதிகளில் தினமும் காலை 9 மணிக்கும், மாலை 6 மணிக்குமிடையில் ஓர் விற்பனவு நடந்தேறும்.

அவரவர் இயல்புக்குத் தகுந்த விதமாய் வாங்கக்கூடியதாக உபயோகமுள்ள உடுப்புவகைகளும், வீட்டுப்புடவைகளும் அதிகம் நியாயமான விலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருக்கும். தயவுசெய்து சமுகங்கொடுத்து ஏதோ சில வாங்கி அத்தாலே நத்தார்விழாக் காலத்திலே வறியவர்களின் கஷ்டங்களைப் போக்க மனமுவந்து ஒத்தாசை செய்யுங்கள்.

மரக்கறிவகைகளும், தேங்காய்வகைகளும், மற்றும் தேவைக்கு அவசியமான பொருட்களும் நியாயமான விலையில் விற்கப்படும்.

தருமசீமாட்டிகள் சபை.

எனவே, நம்நாட்டுத் தெய்வவழிபாட்டில் காணப்படும் சிறந்தமுறைகளைக் கையாண்டு நம்நாட்டுத் திருச்சபை மெய்யாகவே இந்தியதிருச்சபையாக விளங்கவைக்கக் கங்கணம் கட்டியுள்ளனர் இருகுருமார். அவர்கள்வளம் பெற்ற காவேரிக்கரையிலே, குளித்தலைஅருகே, தண்ணீர்பள்ளிக் கிராமத்தைஒட்டியுள்ள ஒருவனத்திலே தங்கள்ஆச்சிரமத்தை நிறுவியுள்ளார்கள். அவர்களின்ஆலயம் சென்ற ஐப்பசிமாசம் 11-ந்தேதி வேதமுறையின்படி மந்திரிக்கப்பெற்றுப் பிரதிஷ்டைசெய்யப்பட்டது. திவ்வியயேசுவே அந்தஆச்சிரமசாசுவத சிரேஷ்டராகவும், அவ்விருகுருக்களின் தந்தையாகவும், துணைவராகவும் திருப்பேழையில் அமர்த்தப்பட்டார். பலகுருமாரும், பிரமுகர்களும் விழாவிற்கு விஜயஞ்செய்து சிறப்பித்தார்கள்.

ஆச்சிரமவாசிகளின் அன்றாடவாழ்வு முற்றிலும் இந்திய சந்நியாசிகளின் வாழ்க்கைமுறையையொட்டி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஆடை, காவிவஸ்திரம். போசனம், புலால்நீக்கியஉணவு. குடியிருப்புக் கூரைமேய்ந்த எளிய குடிசை. தொழில், தியானமும் தவத்தோடுகூடிய செபமும். வருங்காலத்தில் தத்துவஞான, வேதசாஸ்திர ஆராய்ச்சியும். சந்நியாசவாழ்க்கை ஒழுங்கு அர்ச். ஆசீர்வாதப்பர் சபையாரின் ஒழுங்குத்திட்டத்தை அடிப்படையாகக்கொண்டது. ஆச்சிரமவாசிகள் இருவரில் முதல்வரும், "மோன்ஷஞசுவாமி" என இதுவரை அழைக்கப்பட்டு வந்தவருமான பரமஅரூபியானந்தசுவாமிகள் இந்தியகலைமட்டில் அளவற்ற காதல்கொண்டவர். அவருடையவும், அவரதுதோழர் வண. லெசோசுவாமிகளுடையவும் நாலைந்துவருட முயற்சியாலும், உழைப்பாலும் தண்ணீர்ப்பள்ளி, சாந்திவனத்தில் ஸ்தாபகம்பெற்றுள்ளது இந்தச்சச்சிதானந்த ஆச்சிரமம்.

### நன்றியறிந்த ஸ்தோத்திரம்

பிறேக்நகர் திவ்விய குழந்தையேசுவின் திருவருளாலும், சங். அல்போன்சா கன்னியாஸ்திரீயின் சலிகையாலும் நான் கேட்டு வந்த காரியம் அனுகூலமானபடியால் நன்றிபாராட்டி இதனைப் பிரசுரஞ்செய்கிறேன்.

A R.

## யாழ்ப்பாண ஆசனக்கோவில்

அதிகம் சமீப காலத்திலே யாழ்ப்பாணப் புதிய ஆசனக்கோவிலில்பிரவேசிப்பதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுவருகின்றன. (கட்டியெழுப்பக் கருத்தாயிருக்கும் மகாப்பெரிய டோமுடன்கூடிய) பலிபீடஸ்தானமும், பாரியதான இந்தஆலயத்தின் சிறகுகளும் கருத்தளவில் மாத்திரம் காரியமானபோதிலும், கத்தோலிக்க பயபக்தியானது இன்னுமே பூர்த்தியாகாத இந்த ஆலயத்தில் பூரணமுறையிலே பிரவேசிக்கவேண்டுமெனச் சாதிக்கின்றது. அதனல் நடுக்கோயிலையும், பலிபீடஸ்தானத்தையும் பிரித்துநிற்கின்ற பெரிய வில்மாடம் சுவர் ஒன்றால் மறைக்கப்பட்டுவருகிறது. நடுக்கோவிலே சமீபத்தில் பாவனைக்குத் திறந்துவைக்கப்படும்.

இந்த விசேஷப்பட்ட நிகழ்ச்சியின்போது யாழ்ப்பாணத்தின் தாய்க்கோவிலாகிய இதன் பங்குவிசாரணைக் கிறீஸ்தவர்களும், அபிமானிகளும், அன்பர்களும் பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதாவாகிய தங்கள் திருத்தாயார்மட்டிலும், அரைவாசி குறைவேலையாயிருக்கும் அவரது கோயில்மட்டிலும் தங்களுக்குரிய கடமைகளை ஞாபகப்படுத்திக்கொள்ளுமாறு கேட்கப்படுகின்றார்கள்.

ஆசா. யோசேவாஸ் குருமுனிவரின் மூன்றம் நூற்றண்டு

## ஞாபகவிழா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பரோபகார ஊழியத்தால் அவர் பல ஆன்மாக்களைத் தேவன்பக்கமாக வெற்றிகொண்டார்.

அக்காலத்திலே இலங்கையில் நெடுந்தூரம் பிரயாணஞ்செய்வது பெருங்கஷ்டமாகும். நாட்டின் மத்தியபாகங்கள் அடர்ந்த பெருங்காடுகள். அவற்றிலே ஆனை, புலி, கரடி முதலாம் கொடியவிலங்குகள். இந்தக் காட்டுப்பாதைகளால் தமது உயிரைக் காத்துக்கொண்டு இலங்கைமுழுவதும் சுற்றுப்பிரயாணஞ்செய்து, அத்துணை பெரும் தியாகங்களுடன் ஆத்துமாக்களை ஈடேற்றியும், நல்வழிப்படுத்தியும் இங்கே திருச்சபையைத் திரும்பவும் நிலைநாட்டிவைத்துப்போன இந்தக் குருமுனிவரின் அரியஞாபகம் கத்தோலிக்கநன்மக்களின் இதயங்களில் என்றைக்குமே அழியாத ஓர் ஞாபகமாய் இருக்குமென்று சொல்லவேண்டியதில்லை. கருணாநிதியானதேவன் தமதுஇரக்கத்தால் இவரை நமது இலங்காதுவீபத்துக்கு அனுப்பி, இங்கே அவரைக் கத்தோலிக்கசமய பாதுகாவலனாக நியமிக்கத் திருவுளங்கனிந்ததற்காக நாம் அப்பரம்பொருளுக்குத் தகுந்த தோத்திரஞ்செய்யவேண்டியவர்கள் என்க.

## பாடசாலைக்கோணம்

### மீட்பரின் வருகை

(வதிரி, எஸ். மரியநாயகம்)

ஆதித்தாய் தந்தையர் கட்டிக்கொண்ட தோஷத்தினல் சகலமானிடரும் பாவிகளானார்கள். ஆனல், கிருபாநிதியானதேவன் அவர்கள்மட்டிற் கொண்ட அன்பிற்பெருக்கினல் அவர்களை இரட்சிக்கத் தமது ஏகசுமாரனை உலகுக்களித்தார். பாவிகளைமீட்கவந்த பரஞ்சுடர்—தம்மைப்பக்திசெய்வார்க்கு முக்தியருளும் பரலோகநாதர் மனுஷாவதாரஞ்செய்து, பச்சிளங்குழந்தையாய், வாடைக்குளிரினல் திரேகம் நடுங்க, மந்தைத்தொழுவத்தில்கந்தைத் துணிகளால் சுற்றுண்டு, மெல்லியபுல்லணையில் வளர்த்தப்பட்டுக் கண்ணயர்ந்த சுபதினம், மார்கழிமாதம் 25-ந் திகதியாகும்.

இச்சுபதினம் கத்தோலிக்கமக்களுக்கு மனமடங்காத குதூகலம் விளைக்கும் ஓர் மங்கலதினமாகும். மெசியாவின் வருகையை முன்னோர் எதிர்பார்த்திருந்த மகாதினமாகும். பாலர் பாலகிகளின் அழகியவதனங்கள் பரிதிகண்ட பங்கயங்களென மலரும் பண்புமிக்க சுபதினமாகும். அலகையின் அடிமைத்தளையிலிருந்து உலகை இரட்சிக்கவந்த திருமீட்பரின் சுபதினத்தைச் சகலரும் ஆவலுடன் எதிர்பார்ப்போமாக!

தி. இ. கல்லூரி
கரவெட்டி.

### புதியஏற்பாட்டின் ஆரம்பகாலம்

உலகம்உண்டான காலந்தொடக்கம் நமதுஇரட்சகராகிய கிறீஸ்துபெருமான் ஜனனமான தினம்வரையும் பழையஏற்பாட்டின் கொள்கைகளே அனுசரிக்கப்பட்டுவந்தன. ஆனல், சுதனுகியசருவேசுரன் மனுஷாவதாரம்எடுத்து முப்போதும்கன்னிகையான மரியம்மாளிடமீருந்து பிறந்த காலந்தொடக்கம் புதியஏற்பாடு ஆரம்பமாகிவிட்டதெனலாம். ஆகவே, நத்தார்திருநாள் பழையஏற்பாட்டின்முடிவையும், புதியஏற்பாட்டின் ஆரம்பத்தையும் நமக்குத் தெளிவாக்குகின்றது.

ஓ! பரம்பொருளே! ஆதிஅந்தமில்லாத அமலநாதனே! மனுக்குலத்தின்மேல்கொண்ட மட்டில்லாதஅன்பின்நிமித்தம் மாட்டுத்தொழுவத்தில் பிறந்து சின்னப்பாலகனுகக் காட்சியளித்தீர். சிங்காரமாளிகைகள், மணிமாடங்கள், ஆடம்பரங்களை அறவே துறந்து, தரித்திரகோலமாய்க் கடுங்குளிரில் காட்சிதந்ததிவ்வியபாலகனே! வறுமையே பேரின்பதலத்தின் வாசல்என்பதைக் காட்டச்சித்தமானீரே. தமதுவருகையின்போது வானதூதர்கள் "பரலோகத்தில் தேவனுக்கு மகிமையும், பூலோகத்தில் நல்லமனதுள்ளவர்களுக்குச் சமாதானமும் உண்டாவதாக" என்றுபாடிய மங்கலகீதத்தை உற்றுயோசிக்கின் தூயவாழ்வின்மகிமை நன்குவிளங்கும்அன்றோ! பாலர்களாகியநாங்கள் பட்டாசுகள் வெடித்துத் தேவபாலன்பிறந்த நத்தார்த்திருநாளை ஞாபகப்படுத்தும் பெரியதினம் இதோகிட்டிவருகின்றது. அதனைமுன்னிட்டு எங்களுக்கு ஒரு மாசவிடுதலையும் கிடைக்கப்போகின்றது. இத்தினத்தை வெளிஆடம்பரங்களோடுகொண்டாடுவதில்மட்டும் நின்றுவிடாது, சுத்தஇருதயத்துடன் திவ்வியபூசைகண்டு சின்னயேசுபாலனை எங்கள்இருதயங்களிலும் பிறக்கச்செய்ய முயற்சிப்போமாக.

பாப்பாமோட்டை—பா. அருளப்பு

* * *

"கிடைக்கப்பெற்ற வினுக்களுக்கு விடைகளும், மற்றவியாசங்களும் வரும்வரும்கிழமைகளில் தோன்றும்."

B. E. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரிகோணமலைத் தபால்

**குருப்பட்டாபிஷேகம்:—** வண. அல்போன்ஸ் டெல் மார்மல் S. J. பிறதர் அவர்கள் இந்தியாவிலே கேர்சியோங்கில் இருந்துவரும் அர்ச். மரியநாயகியின் குருமடத்திலே சென்ற 21-ந்திகதி புதன்கிழமை குருத்துவாபிஷேகஞ் செய்யப்பெற்றிருக்கின்றார். குருப்பட்ட திருவைபவத்திற்குச் சமுகமளிக்குமாறு இவர்பெற்றார் அமெரிக்க ஐக்கியதேசத்திலிருந்து வந்திருந்தனர். புதியகுரவரும், அவர் பெற்றாரும் இலங்கையைத் தரிசிக்கவிருக்கின்றனர்.

**அநாதசாலை:—** அர்ச். செபஸ்தியாரின் அநாதசாலைப்பிள்ளைகள் சென்ற வாரம் தங்கள் வருடாந்த விழாக் கொண்டாட்டத்தை நடத்தினார்கள். பந்தையவிளையாட்டுகளுடன் கொண்டாட்டம் ஆரம்பமாயிற்று. அவற்றிலே கடலேரியில் நடைபெற்ற வள்ளப்பந்தையமும் ஒன்றாயிற்று. வண. ஜே. லாங் சுவாமியவர்கள் காண்பித்த சினிமாப்படக்காட்சியின் பின் மகாவந். கிளென்னி ஆண்டவர் பரிசில்கள் வழங்கினார்.

**பரிசளிப்புவிழா:—** அர்ச். தெரேசம்மாள் கன்னிகாமடத்துக் கலாசாலைப் பரிசளிப்புவிழா சென்ற 16-ந்திகதி வெள்ளிக்கிழமை நடந்தேறியது. அதிலே திரிகோணமலை மேற்றிராணியாண்டவர் பேசியபோது: கன்னியாஸ்திரீமாருக்குக் கல்விபயிற்றுவதென்பது ஓர் தொழில்அல்ல, ஆனால் ஓர் அழைத்தலாயிருக்கிறது. கன்னியாஸ்திரீமாரின் தற்பரித்தியாக போக்கானது ஏனையசாதாரண ஆசிரியர்களிலும் செறிந்து, அதுகாரணமாக இந்தக்கலாசாலை சென்றவருடம் எஸ். எஸ். சி. பரீட்சையில் நூற்றுக்கு 100 விகிதம் சித்தியடையலாயிற்று. இந்த நூற்றுக்கு 100 விகிதம் அல்லது 100 விகிதத்துக்குக் கிட்டியவீதம் சித்திபெறுவது இந்தக்கன்னிகாமடத்தில் நிகழ்ந்துவரும் ஓர் வருடாந்தநிகழ்ச்சியாகும். அதனால் இத்தீவுமுழுவதிலுமே சித்திவிகிதம் மிகக்குறைவாயிருக்க, இந்த மடம் அடைந்துள்ள சிறந்தசித்தியானது நமது வாழ்த்துகளுக் குரியதாகும் எனக் கூறலாயினர்.

**பாண்டுவாத்தியசங்கீதவிழா:—** சம்மிக்கேல் கல்லூரிப் பாண்டுவாத்தியகோஷ்டியால் நடத்தப்படும் "அல்போன்ஸ் றிச்சேட் சுவாமிகளின் ஞாபகசங்கீதவிழா" சென்ற 17-ந்திகதி நடைபெறலாயிற்று. அத்தருணம் ஓர் சங்கீதப்போட்டியும் நடத்தப்பட்டது. அதில் முதன்மைவகித்தமூவர் திரிகோணமலை மேற்றிராணியாண்டவரால் பரிசில்கள் வழங்கப்பெற்றார்கள்.

— நிருபர்

### பிரியாவிடை வைபவம்

கடந்த ஐந்தாண்டுகளாய் இளவாலைப்பகுதி மூப்புச்சுவாமியாரும், கட்டளைக்குரவருமாயிருந்த வண. ஜே. எவ். சேவியர் சுவாமியவர்கள் ஊறணிக்குமாற்றப்பட்டமையை அறியவந்த வலித்தூண்டற் கத்தோலிக்க மக்கள் அவருக்கு ஓர்பரிமளிப்பான பிரிவோபசாரம் நடத்தினார்கள்.

அவர் புதியவிசாரணைப் பங்குக்குப் புறப்படும்தினமாகிய 20-11-51 செவ்வாயன்று வாத்தியவரிசைகளுடன் சேந்தாங்குளச்சந்தியில் அவரை வரவேற்றுநிற்க, திரளாகவந்துகூடிய சனக்குழாமின் கரகோஷமத்தியில் மூப்பர், சக்கிறிஸ்தாம் திரு. ம. சூசைமுத்து ஆகியோரால் அவருக்கும், புதியகட்டளைக்குரவர், உதவிக்கட்டளைக்குரவர்க்கும் புஷ்பாரங்கள் சூட்டப்பட்டன. பெண்மணிகள்சார்பாகத் தங்கமணி சூசைமுத்துவால் ஓர்பூஞ்செண்டு அளிக்கப்பட்டதும் பிரியாவிடைநாயகர் வாத்தியங்கள் இசைக்க ஆலயவளவுக்கு அழைத்துச்செல்லப்பெற்று அங்கே சிறப்பாய் அமைக்கப்பட்டிருந்த மேடையிலே இரு குருப்பிரசாதிகளும் புடைசூழ ஆசனத்தமர்ந்தனர்.

பின்னர் பாடசாலைப்பிள்ளைகள் பிரியாவிடைப்பாக்கள்பாடியதும் திரு. அ. மேரியோசேப்அவர்கள் ஓர்பிரிவோபசாரப்பத்திரம் படித்துக்கொடுத்தனர். மூப்பர்அவர்கள் ஓர்அன்பளிப்பும்வழங்கினர். பாடசாலைப்பிள்ளைகள் தங்கள் நடிப்புகள் பாடல்களாலே சபையை மகிழ்வித்து நின்றார்கள். ஈற்றில் சுவாமியவர்கள்எழுந்து கத்தோலிக்கரும், மறுசமயத்தினரும் தமது பிரியாவிடை வைபவத்திற்குச் சமுகமளித்ததையிட்டு மனமார்ந்த நன்றி தெரிவித்து ஆசீர்ந்தனர். பின்னர் ஆடவர்கள்பலர் மோட்டார்தாரூடராய்ச் சுவாமியாரைப் புதியவிசாரணைப்பங்காகிய ஊறணி அர்ச். அந்தோனியார் ஆலயத்திற்கழைத்துச்சென்று ஆசிபெற்றுத் திரும்பினார்கள்.

— நிருபர்

### புதுக்குடியிருப்பு
## சனசமூக நிலையம்

இதன்பகிரங்ககூட்டம் 21-11-51 பிற்பகல் 2 மணிக்குப் புதுக்குடியிருப்புக் கத்தோலிக்கபாடசாலையிலே முல்லைத்தீவுக் காரியாதிகாரி அவர்கள் தலைமையில்கூடியது. அவ்வேளை வவுனியா வட்டாரப்பகுதித் தலதாபன உதவிஅதிபரும், சனசமூகநிலையப் பரிசோதகரும் உட்படச் சுமார் எண்ணூறு பேருக்குமேல் சமூகமாக இருந்தார்கள். இவர்களை வரவேற்று இவ்வூர்ச்சிறார்கள் பலஆடல்கள் பாடல்கள் மூலம் சபையாரைக் குதூகலிக்கச்செய்தார்கள். சனசமூகநிலையப் பதிவுக்கு நன்றிகூறியும், வானொலி அமைத்தலின் அவசியத்தை எடுத்துக்காட்டியும் ஆசிரியர் S. T. செல்லப்பா, ஆசிரியர் P. அருளானந்தம், திரு. மி. அ. பொன்னையா என்பவர்கள் பொருட்பொழிவுகள் ஆற்றினார்கள். தலைவர்அவர்களும், தலதாபன உதவிஅதிபரும், சனசமூகநிலையப் பரிசோதகரும் தங்கள் பேச்சிலே, இவ்வூர்மக்களின் ஊக்கத்தையும், வாலிபர்களின் ஒழுக்கத்தையும், அவர்களின் ஆக்கத்தாலாகிய அழகிய வாசிகசாலையையும், விளையாட்டு மைதானத்தையும், சிறுவர்களின் ஆடல் பாடல்களையும் பாராட்டினார்கள். தங்களாலான எவ்விதஉதவிகளையும்செய்ய எந்நேரமும் ஆயத்தமாயிருப்பதாகவும் வாக்களித்தார்கள். சனசமூகநிலையம் எக்காலமும் வாலிபதசையுடன் மிளிர்வது அவர்கள்கடமை என்பதை அழுத்தமாகத் தெரிவித்தார்கள். ஈற்றில் தோட்டஉபசாரணையோடும், கடவுள் வணக்கத்தோடும் கூட்டம்கலைந்தது.

— நிருபர்

### சில்லாலை சமூகசேவா வெளியூர்ச் சங்கம்

இச்சங்கத்தின் ஐந்தாவதுஆண்டு நிறைவுவிழா 4-11-51 ஞாயிறுகாலை 10 மணியளவில் கொழும்பு தட்டாதெருவிலுள்ள அர்ச். செபஸ்தியார்கல்லூரியில் செபத்துடன்சிறப்பாக ஆரம்பமாகியது. திரிகோணமலை, மன்னார், ஹற்றன், கண்டி, அநுராசபுரம், காலி ஆகிய இடங்களிலிருந்து சங்கத்தினர்களின் பிரதிநிதிகள்பலர் கூட்டத்திற்குச் சமுகங்கொடுத்திருந்தனர். திரு. பி. அந்தோனிப்பிள்ளை அவர்கள் தலைமைதாங்கினார். பொதுக்காரியதரிசி கடந்தஆண்டுஅறிக்கை வாசித்தபின்பு அடுத்தஆண்டுக்குக் கடமையாற்றப் பின்வரும் புதியஉத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அக்கிராசனர்: திரு. பி. எஸ். அமிர்தநாதர்—உபஅக்கிராசனர்கள்: திரு. லூயிஸ் அல்பிறேட், திரு. ஜோனுஸ்ஆசிரியர்—பொதுக்காரியதரிசி: திரு. எஸ். மரியதாஸ் செல்வராஜன், உதவிஆசிரியர் சுதந்திரன், கொழும்பு—உபகாரியதரிசி: திரு. ஏ. ராஜதுரை இக்னேஷியஸ்—தனாதிகாரி: திரு. பொன்ராஜா, ஆசிரியர், சென் ஜோசப்ஸ்கல்லூரி, கொழும்பு—உபதனாதிகாரி: திரு. பி. அந்தோனிப்பிள்ளை. 9 பேரைஉள்ளடக்கிய செயற்குழுவொன்றும் நிறுவப்பட்டது. புதிய உத்தியோகஸ்தர்கள் தெரிவுசெய்யப்பட்டபின் சொற்பொழிவுகள் ஆரம்பமாயின.

"சில்லாலைஎன்னும் கிராமத்தைச் சேர்ந்தவர்கள்யாவரும் கத்தோலிக்கர், யோசேவாஸ்முனிவரின் திருவடிகளால் பரிசுத்தப்பட்ட அப்பூமி உலகிலேயே மிக அருமைபெருமையாகச் சின்னரோமைஎன்னும் அழகிய காரணப் பெயரைப் பெற்றுக்கொண்டமை அதன்மதவளர்ச்சிக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்" என்று முதற்பேசியஆசிரியர் திரு. வேதநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்.

கண்டியிலிருந்துவந்த பண்டிதர்சந்தியாப்பிள்ளை அவர்கள் பேசியபோது: "கஷ்டப்படும் மக்களுக்கும் கல்விகற்கக்கூடிய சூட்டிகையான பிள்ளைகளுக்கும் இச்சங்கம் கூடியஉதவி செய்யவேண்டு"மென்று குறிப்பிட்டார். அடுத்துப்பேசிய சுதந்திரன் உதவி ஆசிரியர் திரு. எஸ். எம். செல்வராஜன் பின்வருமாறு குறிப்பிட்டார்:

"எனக்குமுன்பேசிய ஆசிரியர் மதவளர்ச்சிபற்றிப் பேசினார்கள். நாம் மதவளர்ச்சியோடு சமூகவளர்ச்சியையும் கவனிக்கவேண்டும். நமது கிராமத்தவர் முக்காற்பங்கினரும் கமக்காரர்கள். ஆனால், "நெல்லாலை போல்வளரு நீர்ப்பண்ணை சூழ்ந்திலங்கு—சில்லாலையென்னுந் திருவூர்" என்று வட்டுக்கோட்டைச் சண்முகஞ் சட்டம்பியாரவர்களால் புகழப்பட்ட நமதுகிராமத்தில் இன்று உழவுதொழில் அன்றைய நிலைமையில்தான் இருக்கிறதா என்று கேட்டால் இல்லையென்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. இரட்டைமாடுகளோடு மாடாக வயலில்நின்று தனிஒருவனாகக் கஷ்டப்படும் கமக்காரன் இயந்திரங்கள்போன்ற தற்கால நவீனசாதனங்களைக்கொண்டு பயிரிட்டுப் பயனடையப் பலவிதத்திலும்பணி புரியவேண்டும் இச்சங்கம். அத்தோடு 5 வயதுமனிதனாகிவிட்ட இச்சங்கத்தின்சார்பாக ஓர்மாதஇதழும் ஆரம்பிக்கவேண்டும். அதன்மூலம் நம்கிராமத்தவரின் அறிவைவளர்க்கவும், சங்கத்தின்சாதனைகளை அவர்களுக்குத் தெரிவிக்கவும் முடியும்."

அநுராதபுரத்திலிருந்துவந்த திரு. எஸ். எம். ஜோசப், கண்டியிலிருந்து வந்த திரு. எஸ். ஏ. கொன்ஸ்ரன்ரைன் ஆகியோரும் கூட்டத்தின்வளர்ச்சி எப்படியிருக்கவேண்டுமென்பதுபற்றிப் பேசினர். திரு. பொன்ராசா, திரு. பி. எஸ். அமிர்தநாதர் ஆகியோர் நன்றியுரைகூறினர். பின்பு சிற்றுண்டி பரிமாறப்பட்டது. சங்கஅங்கத்தவர்களின் உருவப்படங்களும் பிடிக்கப்பட்டன. செபத்தோடுகூட்டம் இனிது முடிந்தது.

— நிருபர்

### வரவுவாரப்போட்டி
## வெள்ளிக்கிண்ணம்

திரிகோணமலை நகரபாடசாலைகளின் வரவுவாரப்போட்டியில் அர்ச். சூசையப்பர் தமிழ்ஆண்பாடசாலை முதன்மையாகவந்ததற்காக வித்தியாதரிசி C. முத்தையா அவர்களால் இப்பாடசாலைக்கு ஓர் வெள்ளிக்கிண்ணம் வழங்கப்பட்டுள்ளது. பாடசாலையில் முதன்மையாக வந்த வீட்டுத் (House) தலைவர்களுக்கும் பதக்கங்கள் வழங்கப்பட்டன. வட்டார வரவுஉத்தியோகஸ்தர் திரு. வி. நாகரத்தினம் அவர்கள் நன்றிகூறினார். அன்னாரின் ஊக்கம் வியக்கப்படத்தக்கது.

— நிருபர்

## பொது வர்த்தமானம்

### ஒருபுத்தகம் 63 பவுண்

ஐந்தாம்ஜோர்ஜ் அரசராலே ஆரம்பிக்கப்பெற்று, அவரைத்தொடர்ந்து வந்த அரசர்களால் ஆதரிக்கப்பட்டதான முத்திரைசேகரிக்கும் சிறந்த இயக்கமானது லண்டன் நகரிலே வெளிவரவிருக்கும் புத்தகம்ஒன்றில் முதன்முறையாய் நன்குவிளக்கப்படவிருக்கிறது. இந்த முத்திரைச்சேகரிப்பைப் பரிபாலிக்கும்அதிகாரியானசேர்ஜோண் வில்சன் அவர்களே இப்புத்தகத்தை எழுதியிருக்கின்றார். இதன்பிரதிஒன்றின்விலை 63 பவுண் அதாவது 840 ரூபா. அரசர்கள்சேகரித்த இந்த முத்திரைக் சேகரிப்பிலே சுமார் 2 லட்சத்து 50ஆயிரம் முத்திரைகள் அடங்கியிருக்கின்றன. இவைகள்சுமார் 330 வெள்ளேட்டுப்புத்தக பக்கங்களில் பேணிவைக்கப் பட்டிருக்கின்றன.

### சமாதான நிரந்தரசெபம்

பெல்ஜியதேச பிறசெல்ஸ்தலைநகரின் புறநகராகிய கோகெல்பேர்க் எனுமிடத்திலே திருஇருதயஆண்டவரின் பஸிலிக்காஎனும் புதியதோர்மகாலயம் கட்டியெழுப்பிப் பிரதிட்டைசெய்யப்பட்டிருக்கிறது. இந்தமகாலயம் இரு உலகயுத்தங்களிலும் உயிரிழந்தபெல்ஜியர்களின் ஞாபகமாய்அமைந்து, "சமாதானத்துக்கான ஓர் நிரந்தரசெபம்" என வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இதிலே பெரியஅடுத்தாருடன் 8 பக்கஅடுத்தார்களும் இருக்கின்றன. பெல்ஜியம் சுதந்திரம்அடைந்த 75-ம் ஆண்டுநிறைவின் ஞாபகமாக இதனை அமைக்க வேண்டுமென்று இரண்டாவது லெயோப்போல்ட்அரசர் முதலில் திட்டஞ்செய்திருந்தார். ஆனால், அவர் பரீஸ்நகர்சென்று அங்கு மொண்மாத்தர்குற்றில் அமைந்துள்ள திருஇருதய ஆண்டவரின் மகாலயத்தைப் பார்த்தபின் அப்படியான ஓர்மகாலயத்தைப் பெல்ஜியமும் கொண்டிருக்கவேண்டுமெனத் தீர்மானித்தார். இதற்கு அஸ்திவாரக்கல் நாட்டியவரும் அவரே.

### றொக்பெல்லர் ஸ்தாபனம்

றொக்பெல்லர் ஸ்தாபனம்என்பது நியூயோக்நகரிலே தலைமைஸ்தானத்தைக் கொண்டுள்ள ஓர்தர்மஸ்தாபனமாகும். இது 1913-ம்ஆண்டு திரு. ஜோண் டி. றொக்பெல்லர்அவர்களால் உலகமுழுவதிலும் மனிதவர்க்கத்தின் நல்வாழ்வை விருத்திசெய்வதற்கென அடியிடப்பட்டது. இந்தவேலையை அது தர்ம, சமய, கல்விச்சங்கங்களுக்கு உதவிசெய்து கொண்டு நடத்துகின்றது. விசேஷமாக அவுஷத, சுகாதார தொண்டில் அதுகரிசனையெடுத்து வருகின்றது. வருடம்ஒன்றுக்கு இந்த ஸ்தாபனத்தின்வருமானம் 15 லட்சம் பவுண். மலேரியாவைக் கொண்டு சென்றுபரப்பும் நுளம்புக்கொள்ளையை எதிர்த்துப்போராடுவதில் அது மிக்கான கரிசனை கொண்டுள்ளது.

### பத்திரிகைப் பெருவீதி

லண்டன்நகரிலே ரெம்பிள்பார்எனுமிடத்திலிருந்து லுடகேற்சேர்க்கஸ் எனுமிடம்வரையிலே நீண்டிருக்கும் 600 யார்நீளமான பெருவீதியானது கடந்த 700 வருடங்களுக்குமேல் "பிளீற் ஸ்றீற்" எனும்நாமத்தை வகித்திருக்கின்றது. புதினப்பத்திரிகைகள், பிரசஞ்சிகைகளை அச்சேற்றி வெளியிடுதற்கென்று முற்றாகவே ஒதுக்கிவைக்கப்பெற்றதாய் உலகின் தலைநகர்கள்எதிலுமுள்ள ஒரேயொருவீதியாய் இது ஒப்பற்றுவிளங்குகின்றது. பிரித்தானியபெரிய தேசியதினவர்த்தமானிகள், மாலைப்பத்திரிகைகளுள் அதிகமானவற்றின் காரியாலயங்களும், மாகாண பத்திரிகைகளின் லண்டன் காரியாலயங்களும், பத்திரிகைகளுடன்சம்பந்தப்பட்ட பிறவும் இந்த வீதியில்தான் அமைந்திருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்

## அண்ணு சொல்வது

அன்பார்ந்த சகோதர, சகோதரிகளுக்கு வணக்கம்!

ஆசாரத்துக்குரிய யோசேவாஸ் முனிவர் பிறந்த மூன்ரும் நூற்ருண்டு நினைவுவிழா வருகிற மார்கழி 2-ந்திகதி ஞாயிற்றுக்கிழமை நமது இலங்கைத் தீவில் கொண்டாடப்படும்.

யோசேவாஸ் முனிவர் ஓர் இந்திய பிராமணர். கோவைநகரில் பிறந்தவர். போர்த்துக்கேய கல்வி பயின்றவர். இவர் ஏன் இலங்கைக்கு வந்தார்?

போர்த்துக்கேயர் கீழ்நாட்டில் ஆதிக்கம் செலுத்திய பொழுது சத்திய வேதம் இங்கு பரம்பியது. அவர்களுடைய பலம் குறைந்துபோக, வேத விரோதிகளான ஒல்லாந்தர் இலங்கையைக் கைப்பற்றினர். அதனுல் நம் நாட்டில் திருச்சபைக்கு ஆபத்து உண்டாயிற்று. குருமார் இல்லாமற் போகவே, கிறீஸ்துவர்கள் அநேகர் வேதத்தை மறந்தனர். ஒல்லாந்தரின் நெருக்கிடை காரணமாக அநேகர் வேதத்தைக் கைவிட்டனர். ஆயினும் எத்தனையோ கிறீஸ்துவர்கள் வேதத்தை விடாமல் இருந்தார்கள். ஆயினும ஆயன் இல்லாத மந்தை எப்படி ஒன்ருய் நிற்கும்?

எங்களுக்கு வேதம் போதிக்கவும், தேவதிரவிய அனுமானங்களை அருளவும் குருமார் இல்லை என்று அறிந்த முனிவர் வேத விரோதிகளுக்கு அஞ்சாமல், மாறுவேடம் பூண்டு இலங்கைக்கு வந்தார். நாடு மேடு எல்லாம் கால் நடையாகக் கடந்தார். இரவு இரவாய்த் திருவூழியம் செய்தார். ஆயிரக் கணக்கான பேரை மனந்திருப்பினுர். பழைய கிறீஸ்துவர்களைத் திடப் படுத்தினுர். எம் சொந்த நாட்டுக் கலைகளையும் தேவ ஊழியத்தில் சேர்த்துக்கொண்டார்.

அவரும், பிறகுபிறகு அவருடைய சபைக்குருமாரும் இலங்கையின் எட்டுத் திக்குகளிலும் அல்லும் பகலும் அயராது வேலை செய்தார்கள். தியாகம் நிறைந்த ஊழியம். இங்கிலாந்திலே வேதகலாபனை நடந்த பொழுது பிரான்ஸ் தேசக் குருமார் அங்கு தலைமறைவாக இருந்து திருப்பணி புரிந்தார்கள். அது போல, இலங்கையில் வேதகலாபனை நடந்த பொழுதும் இந்திய குருமார் வந்து திருத்தொண்டு ஆற்றினர்.

இப்பொழுது இலங்கைத் திருச்சபை செழிப்புற்று இருப்பதைக் காண்கிரேம். அது வானளாவிய கோபுரம்போல் இருக்கிறது என்று சொன்னுல், யோசேவாஸ் முனிவரும், அவர் சகாக்களும் திரும்பஇட்ட அத்திவாரத்தின் விளைவே என்று சொல்லலாம்.

சகோதரரே, இப்புனித முனிவர் எங்கள் நாட்டின் அப்போஸ்தலர். அவருக்குத் திருச்சபையின் மகிமைகள் கிடைக்க வேண்டும் என்று அதிகம் பிரயாசை எடுப்போம்.

இந்த விழாவையிட்டு உங்கள் ஊரில் நடக்கும் கொண்டாட்டத்தில் எப்படிக் கலந்துகொண்டீர்கள் என்று அண்ணுவுக்கு எழுதுங்கள். சுபம்.

உங்கள் அன்புள்ள
அண்ணு.





செகமீட்பராகிய திவ்விய பாலனின்

**நவதின உற்சவம்**

ஆசா. கபிரியேல் பச்செக்கு சுவாமிகளால்
இயற்றப்பட்டது.

நல்லூர், ஞானப்பிரகாச சுவாமிகளால்
1906-ம் ஆண்டு புதுக்கி அச்சிடப்பெற்றது.

நாற்பத்துநான்கு வருடங்களின்பின்
இப்போது 2-ம் பதிப்பாக வெளிவந்திருக்கிறது.

நத்தால் திருநாளைப் பூச்சிய பயபத்தியுடன்
கொண்டாட உதவியான
நோவனைத் தியானங்களும், செபங்களும்
திவ்வியபாலனின் பிறப்பைச்சார்ந்த ஆசைகள்,
புகழ்ச்சிகள், பிரார்த்தனைகளும் அடங்கியது.

-- விலை 75 சதம் —

யாழ்ப்பாணம்
அர்ச். சூசைமாமுனிவர் அச்சியந்திரசாலை


## விடுகதைகள்

1

புதினங்கள் சொல்லுவார்—
பூட்டனல்ல,
புதுக் கதைகள் சொல்லுவார்—
பாட்டியல்ல,
தினமும் நாம் காணலாம்—
நண்பரல்ல,
தீண்டாமை நீக்குவார்—
ஞானியல்ல,
சலியாது போதிப்பார்—
சாமியல்ல,
பலரும் விரும்புவார்—
பாலரல்ல,
பகருங்கள் பார்க்கலாம்—
புரியாவிட்டால்,
கையிலே இருப்பவர் தான்—
கண்டுகொள்வீர்.

2

கையுண்டு விரலில்லை,
உடலுண்டு வயிறில்லை,
கழுத்துண்டு நரம்பில்லை,
அழகுண்டு அசைவில்லை,
யாரென்று சொல்வீரே.

3

என் அருமைக் கறுப்பன்,
என்னுடனே திரிவான்.
காலையிலே நீள்வான்,
நண்பகலில் நலிந்தே
நாடுவான் என்பாதம்
மாலையிலே நீள்வான்
மனிதனல்லச் சொல்லுவீர்.

—"கரம்"

விடை: 1. பத்திரிகை
2. சட்டை
3. நிழல்

## செபமாலை

1

பூவாது பின்னிய மாலையம்மா —என்றும்
புஷ்பங்கள் வாடாத மாலையம்மா
தேவுல கம்மகிழ் மாலையம்மா —என்றும்
தேடக் கிடையாத மாலையம்மா.

2

துன்பம் அகற்றிடும் மாலையம்மா—என்றும்
தூய வழிகாட்டும் மாலையம்மா
அன்னை விரும்பிய மாலையம்மா—இதற்
கான விலையொன்றும் இல்லையம்மா

3

மன்னவர்க் கெட்டாத மாலையம்மா—தவ
மாதவர் ஓதிடும் மாலையம்மா
அன்பு தொடுத்த ஓர் மாலையம்மா—எங்கள்
அன்னை மரிசெப மாலையம்மா.

— J. எஸ்பீரியர்
முதலியாகுளம்

## தன் வினை தன்னைச் சுடும்

முன் ஒரு காலத்தில் ஓர் சீமாட்டி தன் அழகான மாளிகையில் வசித்து வந்தாள். அவளுக்கு ஒரேஒரு மகன். அவன் கெட்டுப் போய் அவளுடைய காசை வீணுகச் செலவிட்டு, தன் நேரத்தை வேட்டை ஆடுவதில் கழித்தான்.

அந்த மாளிகைக்கு அருகாமையில் ஓர் சிறு குடிசையில் ஓர் கிழவி தன் பேரப் பிள்ளையுடன் வசித்து வந்தாள். அவள் சில தருணங்களில் அந்தச் சீமாட்டியிடம் பிச்சை கேட்கப் போவாள். அவளும் கிழவிக்கு எப்பொழுதும் சோறு கொடுப்பாள். அத்துடன் நிந்தையான பேச்சும் கொடுப்பாள். "அவள் திரும்பவும் என்னைத் தொந்தரவு செய்ய வந்துவிட்டாள்; என்னதான் இவ்விதமான பிச்சைக்காரியைத் திருப்திப்படுத்தும்? சோறுதான் உனக்குத் தேவை; இந்தா, இதை எடுத்துக் கொண்டு அப்புறம் போ."

இவ்வித வார்த்தைகள் அந்த ஏழைக்கு எப்போதும் கிடைக்கும். அகந்தை கொண்ட அந்தச் சீமாட்டி கொடுத்த கொடை இதுதான். வறியவளும் அவற்றைத் தாழ்மையோடு சகித்து, "தயவு செய்து கடவுள் பேரால், பசியாய் இருக்கும் எனது பேரப் பிள்ளைக்குக் கொஞ்சம் சாப்பிடக் கொடுங்கள்; கடவுள் உங்களை ஆசிர்வதிப்பார்" என்று சொல்லி ஒரு பரமண்டல மந்திரமும் அந்தத் தர்மவாளிக்காக எப்பொழுதும் வேண்டிக் கொள்வாள்.

ஒருநாள் அந்த அகந்தை நிறைந்த சீமாட்டி தன்னிடம் வரும் பிச்சைக்காரியின் வருகையை முற்ருக நிற்பாட்ட உபாயம் ஒன்று செய்தாள். கோதுமையில் ஓர் பணிகாரம் சுட்டு அதற்குள் கொஞ்ச நஞ்சையும்போட்டு வைத்தாள். அந்தப் பிச்சைக்காரி வழமை போல் வந்தபொழுது, அந்தத் துஷ்ட சீமாட்டி நஞ்சிட்ட கோதுமைப் பணிகாரத்தை அவளுக்குக் கொடுத்தாள்.

கிழவி அந்தத் தர்மத்தைப் பெற்ற பொழுது எவ்வளவு நன்றி சொன்னுள் என்பது சொல்லாமலே விளங்கும். அவள் வீடு சென்று பாடசாலை சென்ற தனது பேரப்பிள்ளையின் வரவைப் பார்த்துக் கொண்டு இருந்தாள். அந்தச் சுவையுள்ள பணிகாரத்தைத் தாங்கள் இருவரும் ஒருமித்துச் சாப்பிடலாம் என்று நினைத்தாள். இப்படி எதிர்பார்த்து இருக்கையில் ஓர் துரைமகன் தனது தோளில் ஓர் துவக்கையும் காவிக் கொண்டு மிகவும் களைத்துப்போய் வரக் கண்டாள். அந்த அந்நியன் பிச்சைக்காரக் கிழவியின் குடிசைக்குச் சென்ருன். உடனே அக்கிழவி அவன் சீமாட்டியின் மகன் பிலிப் என அறிந்து கொண்டாள்.

"அம்மா, பசிக்கிறது; தாகம் நாக்கைப் பிடுங்கிறது; தயவு செய்து எனக்குக் கொஞ்சம் சாப்பாடு தாருங்கள்; குடிக்கவும் தாருங்கள்" என்று பிலிப் தவிப்புடன் கேட்டான்.

"என் மகன் பிலிப்! இப்போதுதான் கிணற்றில் இருந்து தண்ணீர் கொண்டு வந்தேன்; அதையும் குடித்து, எனது பேரனுக்கு என்று உமது தாயார் தந்த பணிகாரத்திலும். சாப்பிடும்" என்று கிழவி சொன்னுள்.

"அவற்றை எனக்குக் கெதியாய்த் தாருங்கள்; தாருங்கள் சுறுக்காய்" என்று பிலிப் கேட்டான். களைத்துப் போய் இருந்த அம்மனிதன் தண்ணீரையும் குடித்து, அந்தச் சிறிய பேரப் பிள்ளையையும் கவனியாது முழுப் பணிகாரத்தையும் சாப்பிட்டான். சில நிமிஷங்கள் சென்றதும் அவன் கிழவியின் காலடியில் அறிவு கெட்டு விழுந்தான். கிழவிக்கு ஒன்றுமே புரியவில்லை. "இதென்ன! என் தெய்வமே, இவனைக் காப்பாற்றும்; காப்பாற்றும்" என்று கதறினுள்.

உடனே இப்பிரலாப காட்சியைப் பார்க்கச் சனங்கள் கும்பலாக வந்து கூடினுர்கள். "கொலை! கொலை! அந்தக் கிழட்டுப் பிச்சைக்காரியைப் பிடியுங்கள்; கோட்டுக்குக் கொண்டுபோங்கள்" என்று அங்கு நின்றவர்கள் கத்தினுர்கள். சீமாட்டியும் கூட நின்ருள்.

"நான் பச்சைத் தண்ணீர் தானே கொடுத்தேன். அவனுடைய தாய் என் பேரனுக்கெனத் தந்த பணிகாரத்தையும் கொடுத்தேன். ஐயோ! நான் வேறு ஒன்றும் கொடுக்கவில்லை" என்று கிழவி அலறினுள்.

இதைக் கேட்டு நின்ற சீமாட்டி மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள். அறிவு தெளிந்தபின் உரத்த சத்தமாய், "அந்தக் கிழவியைச் சும்மா விடுங்கள்; அவள் குற்றவாளி அல்ல; நானே என் மகனைக் கொன்றேன்; என்னைத்தான் கோட்டுக்குக் கொண்டு போங்கள்" என்று சொன்னுள். இதைச் சொல்லி முடிக்கு முன் அவள் உயிர் பிரிந்து இறந்தாள்.

—N. தருமராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Mai. No. 511. Eng.

## எலிகளும் நுளம்புகளும்

1949-ம்ஆண்டு பம்பாய் நகரிலே எலிப்பிளேக்என்ற பயங்கரகொள்ளை நோய் தலைகாட்டி நெடுநாள் நிலைப்பதாயிற்று. அத்துணைமோசமாக அந்நகர் கஷ்டமுற்று வருந்தியமையாலே நகரசங்கமானது இந்தக்கொள்ளை நோய்க்கு ஓர்முடிவு காணும்படியாய் எல்லாவிதமான நடவடிக்கைகளையும் கையாளுதற்குப் பலபந்தஞ் செய்யப்படலாயிற்று. எலித்தடை வாரமொன்று ஒழுங்குசெய்யப்பட்டது. இறந்ததாய்க் கொண்டுவரப்படும் ஒவ்வோர் எலிக்கும் சன்மானம் வழங்கப்பட்டது.

புராதனகாலங்களிலே இப்படியான கொள்ளைநோய் நடப்பது பம்பாயில் மாத்திரமல்ல, ஆனால், உலகில் எங்கெங்குமே ஓர்சாதாரண சம்பவமாகும். இப்போதுபோலவே தீங்குள்ள இந்த அரிக்கும்பிராணிகள் துறைமுகத்தில் நங்கூரமிட்டுநிற்கும் ஆழ்கடற்பிரயாண கப்பல்களிலிருந்தே வரலாயின. ஏனெனில் இந்தக்கப்பல்களெல்லாம் எலிகள் உள்ளிட்டுப்பெருகிய அபரிமிதமான உணவுப்பொருட்களையே பலகாலும் ஏற்றிவரலாயின.

விசேஷமாய்ச் சென்றகாலங்களிலே இன்றுபோலும் சுகாதாரநிலைமைகள் ஒன்றுமே இல்லாதிருந்தபோது எலிப்பிளேக்என்பது பொதுசனசுகாதாரத்திற்கு உள்ளபடியே ஓர்அச்சுறுத்துகையாய் இருந்தது. பலமுறையும் பிளேக்கொள்ளைநோய்க்குக் காரணமாயிருந்தது.

சுகாதார விஞ்ஞானம் அத்துணை மகத்தான முன்னேற்றங்கள் அடைந்துள்ளதென்பது உண்மையாய்இராவிடின் எலிகளையிட்டு இன்னுமே பயப்படவேண்டியிருக்கும். ஆயினும் எவ்வகையிலும் எலி மனிதவர்க்கத்தின் பிரதானசத்துருஅல்ல. கிருமிகளும், எல்லாத்துக்கும்மேலாக அனோப்பிலெஸ்நுளம்புகளும் பொதுசனசுகாதாரத்துக்கு இன்னுமே மிகப்பெரியதோர் ஆபத்தாய்இருக்கின்றன. அயனுந்தநாடுகளிலும், உபஅயனுந்தநாடுகளிலும் இந்தநுளம்புகள் மலேரியாவைப்பரப்பியும், உலகமுழுவதிலும் லட்சக்கணக்கானமக்களைத் தங்களுக்குப் பலியாக்கியும்வருகின்றன.

திருத்தம்அடைந்துள்ள சுகாதார சாஸ்திரத்தாலே அதன்பலம் வெகுவாகக் குன்றியுள்ளபோதிலும் சுகாதாரநடவடிக்கைகள் மாத்திரம் முற்றும்பயன் அளிப்பனவாகமுடியாது.

ஆகவே, மலேரியாவைத் தடுப்பதற்குக் குயினீனை எதுவாக மனிதன்ஒப்புக்கொண்டிருப்பது அத்துணைபெரிதும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மலேரியாக்காலமுழுவதும் நாளொன்றுக்கு 6 கிறெய்ன் குயினேன் பாவிப்பது இந்தப்பயங்கரநோய்வராது விலக்குவதற்குப் போதியதாகும். இன்னும் ஓர்கால் மலேரியாகண்டு வருந்துமிடத்து 5 முதல் 7 தினங்களுக்குத் தினமும் 15 முதல் 20 கிறெய்ன் குயினேன் சித்திகரமான ஓர்மாற்றுமருந்தாகும். இந்தச்சிபாரிசுகள் வெறுங்கற்பனைகள்அல்ல ஆனால், தற்போது இல்லாதொழிந்த சர்வதேசசங்கத்தால் நியமிக்கப்பட்ட மலேரியா நிபுணர்களின் கம்மிற்றிசெய்துள்ள சிறந்த புத்திமதிஇதுவாகும். இது, அந்தக்கம்மிற்றி 1938-ம்ஆண்டுவிடுத்த அறிக்கையில் அடங்கியுள்ளது.

## நேர்த்தியின் பூர்த்தி

அர்ச். பிலோமினம்மாளிடம் நான் கேட்ட மன்றாட்டு அனுகூலமானதினால் என் நேர்த்திப்படி இதைப்பிரசுரிக்கிறேன். இவ்வர்ச்சியசிட்டவளின் நாமம் புகழப்படுவதாக.

யாழ்ப்பாணம் J. A.

திருஇருதய நாதரின் அனுக்கிரகத்தினாலும், கோடி அற்புதரான அர்ச். அந்தோனியாரின் வேண்டுதலினாலும் எனக்கு உண்டான ஆபத்தில் நின்று காப்பாற்றப்பட்டதினால் நேர்த்திப்படி நன்றியாக இதைப்பிரசுரிக்கிறேன்.

ஊழியன்

யாழ்ப்பாணம் J. A.




# லெக்டோஜன் உங்கள் குழந்தைக்கு

லெக்டோஜன் நிதானமுள்ள போஷணையைத் தருவதிலும், சீரணிப்பதிலும் "தாய்ப்பாலுக்கு மிகவும் ஒத்ததாக" இருக்கிறது. லெக்டோஜன்மூலம் உங்கள் குழந்தைக்குச் சுகத்தைப் பேணக்கூடிய உணவிற்குரிய அதிகப்படியான நலன் கிட்டுகிறது.

### விட்டமின் A-யும் D-யும் கூடுதலாக அடங்கினது

வியாதியினின்று பாதுகாக்கும் விட்டமின் ஏ: வலிமையான எலும்புகளையும் பற்களையும் உண்டாக்கும்; விட்டமின் டி: இவற்றோடு சோகையைத் தடுக்கும் இரும்புச்சத்தும் சேர்க்கப்பட்டுள்ளன.

### இலேசாகச் சீரணிப்பது

வயிற்றினுள் செல்லும் எந்தப்பாலும் 'தயிர்'போற் திரைவது வழக்கம். லெக்டோஜன் பக்குவம் செய்யப்படும் விதத்தினால் தாய்ப்பாலுக்குச் சமானமாக, வயிற்றினுள் திரையும்போது இலகுவாகவும் மெதுமையாகவுமிருக்கிறது.

### தாய்ப்பால் போன்ற பரிபூரணமான ஒரு உணவு

லெக்டோஜன் சுத்தமான பசுப்பாலால் தயாரிக்கப்பட்டுப் பூரணமான, நிதானமுள்ள உணவாகப் பக்குவம் செய்யப்படுகிறது; குழந்தை இயற்கை உணவான தாய்ப்பாலால் வளருவதுபோல் பலமும் திடமும் பெற்றுச் சந்தோஷமாக வளருவதற்கு இது தகுந்த உணவு.




### இனும்

சிசுக்களைப் போஷிப்பதும், பேணுவதும் என்பதுபற்றிய உபயோகமான தகவல்களைக் கொண்ட பிரசித்தமான லெக்டோஜன் 'தாய் புத்தகம்' ஒன்றுக்கு எழுதுங்கள். நெஸில்ஸ் (L) தபாற்பெட்டி 189, கொழும்பு.

உலகத்திலுள்ள குழந்தைகளின் உணவு.


## அர்ச்சியசிஷ்ட அந்தோனியாரின் தருமக்கோணம்

சென் வின்சென்ற் டி போல் தருமசபை யாழ்ப்பாணம்



### நன்றியறிந்த ஸ்தோத்திரங்களும் மன்றாட்டங்களும்

சிங்கப்பூர் :— அர்ச். அந்தோனியாரிடம் நான் கேட்ட மன்றாட்டுக் கிடைக்கப்பெற்றேன். நன்றியாக ஏழைகளின் தருமஅப்பத்துக்குக் காணிக்கை ரூபா 7 அனுப்பி, தயவுசெய்து இதைப் பிரசுரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

C. S. சன்ரியாகோ

நாவற்காடு :— கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியாரே! அடியாள் உம்மை இரந்து கேட்ட மன்றாட்டு அனுகூலமானதால் நேர்த்திப்படி உமது ஏழைகளின்அப்பத்துக்கு ரூபா 3 அனுப்பியிருக்கிறேன்.

ஏழைஅடியாள்—அ. எலோனியா

### கேட்டநன்மைகள் அனுகூலமானதினால் அப்பத்துக்கு அனுப்பப்பட்ட காணிக்கைகள்

நனுஓயா: ஜே. அருளான்டோ 5-00— வேப்பங்குளம்: கே. சின்னப்பு 3-00 — குருனாகல்: ஜி. எஸ். சின்னத்துரை 2-00 —அக்கரபற்றனை: எல். ஏ. எஸ். தோமஸ் 1-00, எச். ஆர். சில்வானுஸ் 2-00 — யாழ்ப்பாணம்: ஜே. அல்பேட் 1-00 — கல்கமுவா: கே. மடுத்தீனாள் -50—சூராவத்தை: இ. மரியஅம்புசமலர் 2-00, என். அன்னம்மா 2-00, மிசெஸ் ஜே. ஏ. 5-00, எஸ். தேவசகாயம் 5-00, ஆர். கத்தரீனம்மா 5-00, ஆர். ரேசம்மா 2-00, பிலோமினா ஜெரேமியாஸ் 2-00, எஸ். சின்னம்மா -50— லின்டுலா: எம். ஜே. பெறேரா 5-00 — முல்லைத்தீவு: ஏ. அன்னம்மா 2-00 — மலாயா: ஜே. சவிரிமுத்து 10-00 — அப்புத்தளை: பீற்றர் 2-00—மஸ்கேலியா: பி. கபிரிகேல் 1-00 — முள்ளிக்குளம்: எம். செபஸ்தியான் சில்வா 1-00—மாருவில்: பிருங் அன்ரன் 15-00—கரவெட்டி: பி. கபிரியேற்பிள்ளை 1-00, எஸ். வஸ்தியாம்பிள்ளை 1-00 — நாத்தாண்டி: வி. டி பி. பெறேரா 2-00— உடப்புசலாவை: எஸ். எம். யோசேப்பு 10-00 — கல்கமுவா: வி. வஸ்தியாம்பிள்ளை 1-00 — கண்டி: எஸ். சந்தனம் 2-00—நீர்கொழும்பு: மேரி லேனா பறுனாந்து 3-50—கேகாலை: ஏ. யுவக்கீம் 5-00 —நாவற்காடு: வி. மனுவல் 3-50— தலவாக்கொலை: எற்வேட் வில்லியம் 1-00, மிஸ் மேரி செல்வராணி 1-00— கொச்சிக்கடை: ஆர். ஜே. செல்லையா 10-00 — கேகாலை: ஜி. எஸ். சின்னத்துரை 1-00— பண்டத்தரிப்பு: ஓர் உபகாரி 10-00—வவுனியா: பி. ஜே. சிறில் 2-00—திரிகோணமலை: ரி. மோசேஸ் 2-00—யாழ்ப்பாணம்: எம். வி. ஆசீர்வாதம் 1-00, அர்ச். அந்தோனியார்பக்தன் 1-00, எம். சின்னப்பு 1-00—நீர்கொழும்பு: கே. எஸ். மனுவல் அன்ரனி பெர்னாண்டோ 1-00 — நனுஓயா: எம். எஸ். இராமசாமி 10-00 — முள்ளிக்குளம்: எஸ். ஞானம்மா குரூஸ 1-50, எல். அருளம்மா லேனா 1-00, எம். செபஸ்தியான் சில்வா 1-00 — புத்தளம்: மிசெஸ் டி. ஜே. அன்ரன் 3-00— பண்டாரவளை: எம். ஏ. சுப்பையா 1-00, டி ஜேம்ஸ் 2-00— காக்காப்பள்ளி: ஆர். எஸ். ஆர். காசியையா 5-00—மருதானை: பி. பேதுரு பெர்னாண்டோ 1-00— சிலாபம்: டபிள்யூ. எம். பெர்னாண்டோ 2-00 சின்னப்பூர்: எம். ஏ. பெஞ்சமின் 10-00 கொழும்பு: ஓர் உபகாரி 5-00 — கல்கமுவா: வி. சந்தியாப்பிள்ளை 1-00 — வட்டகொட: எஸ். ஜே. டேவிற்பிள்ளை 1-50 — யாழ்ப்பாணம்: எம். சின்னப்பு 1-00 — அச்சுவேலி: பி. எஸ். 2-00 — பாஷையூர்: தவிது பறுனாந்து -75 — கேகாலை: ஏ. யுவக்கிம் 5-00 — பரந்தன்: ரி. எம். கிதபொன்கலன் 1-00, ரி. எம். வேதநாயகம் 1-00, எம். ஞுசானம் -25.

| | |
|---|---|
| The Director, St. Joseph's Conference. Bishop's House, JAFFNA. | சென் வின்சென்ற் டி போல்சபைத்தலைவர் மேற்றிராசன மாளிகை யாழ்ப்பாணம். |

## Ceylon Government Railway

### Level Crossing Repairs

The Level Crossing at 0 miles 62 chains (Railway mileage) on the Dematagoda Road between Baseline Road Station and Loco Junction Cabin, Kelany Valley Line will be closed to vehicular traffic for effecting repairs from 11-0 p.m. on Saturday, 1-12-51 to 5-0 a.m. on Sunday, 2-12-51.

During the period of closure road traffic could be diverted through School Lane, Drieberg's Avenue and Maligawatte Road respectively.

Printed and Published for the Proprietor by BASTIAMPILLAI SANTIAGOEPILLAI residing at 39, Main Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, November 29 1951.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org